பக்கங்கள்-16 | 05.புரட்டாசி.2021 | விலை-30.00




# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –354




## சீனாவின் இரசாயன பிடிக்குள் இலங்கை நடப்பது என்ன?

## தலிபான்களை பயன்படுத்தியது போன்று விடுதலைப்புலிகளையும் அமெரிக்கா பயன்படுத்தும் எச்சரிக்கை!

## சீனாவை எதிர்க்க துப்பில்லாத அரசு கொரோனா வைரஸிலிருந்தும் கடனிலிருந்தும் மீள்வது எப்படி?

# சீனாவின் இரசாயன பிடிக்குள் இலங்கை - நடப்பது என்ன?



இலங்கையை பொருத்தவரையில் இயற்கை வளம் கொண்ட நாடாக திகழ்ந்து வருகின்றது. குளிர், வெப்பம், இடைநிலை போன்ற மூன்று காலநிலைகளையும் ஒரே நேரத்தில் காணமுடியும். அதுமட்டுமன்றி இயற்கை பாதுகாப்பை கொண்ட முக்கிய தளமாக திருகோணமலை துறைமுகம் விளங்குகின்றது. இரண்டாம் உலகபோரின் போது கொல்லப்பட்ட 110 சடலங்கள் திருகோணமலையில் புதைக்கப்பட்டுள்ளது. இதுபோன்று இந்தியாவை அல்லது ஆசிய நாடுகளை இலக்கு வைக்க வேண்டுமாக இருந்தால் இலங்கை தீவை பயன்படுத்துவதனூடாக அனைத்து விடயங்களையும் சாதிக்க முடியும் என்பதை வல்லரசுகள் கண்டிறிந்துள்ளன. இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டது என்பதால் அனைத்து இரசாயன பொருட்களையும் பரீட்சித்து பார்ப்பது என்பது மிக இலகுவானதொன்று வான் மார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் பயணத்தடையை ஏற்படத்தினால் எவரும் சென்று வருவதற்கான நிலைமைகள் உருவாக்கப்படாது.

ஆகவே பூகோள ரீதியில் இலங்கையின் அமைப்பு என்பது இயற்கையாக வந்தது ஒன்று. தற்பொழுது கொரோனா வைரஸ் என்ற கொடிய நோயை பரப்பிய சீனா இறுதி பரீட்சாத்தமாக இலங்கையில் பரீட்சித்து வருகின்றது. சீனா வடகொரியாவிற்கு அனுப்ப இருந்த கொரோனா தடுப்பூசிகளை அந் நாட்டின் ஜனாதிபதி ஜிம் ஜொங் எமது நாட்டுக்குள் எந்தவொரு தடுப்பூசியையும் எவரும் தரவேண்டிய தேவையில்லை எனவும் எமது நாட்டின் பாதுகாப்பை நாமே உறுதிப்படுத்திக் கொள்வோம் என்பதாகும். அத்தகைய நிலைமையை ஏன் இலங்கை அரசாங்கம் எடுக்கவில்லை. ஆளுமையற்ற அரசாங்கமாகவே ஜனாதிபதி கணிக்கப்படுகின்றார்.

உலக நாடுகளில் கொரோனா வைரசின் தாக்கம் அதிகரித்தபொழுது முதலாம் அலை, இரண்டாம் அலை, மூன்றாம் அலை என குறைந்த எண்ணிக்கையானவர்களே மரணமடைந்தார்கள் அதாவது நூற்றுக்குட்பட்டவர்கள். முதலாம் அலையில் 5 மரணங்கள் கூட நிகழவில்லை. இரண்டாம் அலையில் 20 மரணங்கள் கூட நிகழவில்லை. மூன்றாம் அலையை தொடர்ந்து நான்காம் அலையில் மரணங்கள் தாண்டிவிட்டது. இதனால் பல இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரிக்கப்படுகின்றது. கொரோனா வைரசின் தாக்கத்தினால் 200க்கும் மேற்பட்ட மரணங்கள் நாளாந்தம் ஏற்படுகின்றது. குறித்த சீன நாட்டினால் பரப்பப்பட்ட கொடிய வைரஸ் அதற்கான பரிகாரத்தை செய்கின்றோம் என்று இலங்கை அரசை கடனாளிகளாக்கி இலங்கை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை குத்தகைக்கு எடுத்து மீள முடியாத கடனில் இலங்கை தீவை அமுல்த்தியுள்ளது. இத்தகையதொரு சூழ்நிலையில் கடன் சுமையினால் இலங்கை அரசு ஒரு பக்கம் தள்ளப்பட மறுபக்கத்தில் ஏனைய நாடுகளின் உதவிகளை புறம்தள்ளிய நிலையில் சீனாவிடமே கையேந்தி நிற்கும் சூழல் உருவாக்கப்படவுள்ளது. சீனா எதிர்க்கிறது என்ற நம்பிக்கையுடன் தனது காய் நகர்த்தல்களை நகர்த்தியுள்ள இலங்கை அரசு தற்பொழுது நிதி நெருக்கடிக்குள் சென்றிருக்கின்றது. தற்பொழுது மத்திய வங்கியில் மூன்று மாதங்களுக்கு போதுமான பணமே உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. பொருட்கள் இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளது. ஆங்காங்கே போராட்டங்கள் உருவாகின்றன. மக்களின் இயல்பு வாழ்க்கையை கட்டுப்படுத்துவதற்காக இலங்கை அரசு முயற்சிகளை மேற்கொண்ட பொழுதும் அது மென்மேலும் இலங்கை அரசின் ஆட்சியை கேள்விக்குறியாக்கியுள்ளது. சீன அரசாங்கமானது இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்தி கடன் சுமை யில் இலங்கை அரசை தள்ளி அம்பாந்தோட்டை துறைமுகம் கொழும்பு போர்ட்சிட்டி போன்றவற்றினூடாக தனது புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. ஆசிய பிராந்தியத்தில் சீனாவிற்கு எதிராக எந்தவொரு நாடும் கிளர்ந்தெழுந்தாலும் அதனை எதிர்கொள்வதற்கு சீனா தற்பொழுது தயாராகிவருகின்றது. இலங்கையானது சீனாவிற்கான ஒத்துழைப்புக்களை வழங்க தவறின் இலங்கையை ஒரு கெமிக்கல் கொண்டு அழிக்கக்கூடிய சக்தியை சீனா அரசாங்கம் கொண்டுள்ளது. இதனால் ஏனைய நாடுகள் பாதிக்கப்பட போவதில்லை. அதன்பின்னர் இலங்கையில் தனக்கான இராஜ்யத்தை சீன அரசாங்கம் நிறுவிக்கொள்ள ஏனைய நாடுகளை எடுத்துக்கொண்டால் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு செல்ல தரைவழிப்பாதை இருக்கின்றது.

ஆகவே பல விடயங்களையும் கருத்தில் கொண்டே சீன அரசாங்கத்தினுடைய நிலைப்பாடு இலங்கை மீது அதியுச்சத்தை எட்டியுள்ளது. கொரோனா வைரசினுடைய தாக்கத்தை ஈடு கொடுக்க முடியாத இலங்கை பொருளாதார நிலையில் பாரிய விழ்ச்சி கண்ட நிலையில் மிக முக்கியமாக சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் இலங்கையில் சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்ததுடன் பொருட்களுக்கான விலைவாசிகளும் உயர்த்தப்பட்டு அத்தியாவசியப்பொருட்கள் தட்டுப்பாடான நிலை உருவாகியுள்ளது. இந்த சூழ்நிலையில் சீனாவை மட்டும் இலங்கை அரசாங்கம் நம்பியிருப்பது என்பது மீண்டும் மீண்டும் இலங்கை அரசை அதாள பாதாளத்திற்குள் கொண்டுசெல்லும் ஒரு நிலைமையை உருவாக்கும். கொரேனாா வைரசினுடைய உருவாக்கம் இலங்கையை தொடர்ந்தும் தாக்க காரணம் என்ன என்பது பற்றி ஆராய்ந்து செல்வோமாக இருந்தால் சீனாவினுடைய சூழ்ச்சிகளே காரணமாக அமைகிறது. இதிலொரு விடயம் என்னவென்றால் தடுப்பூசி ஏற்றப்படுபவரும் மரணிக்கின்றார் ஊசி ஏற்றாதவரும் மரணிக்கின்றார். மரணத்தின் வேகம் அதிகரித்து செல்கின்றது. சீனாவில் வுகான் மாகாணத்தில் உருவாக்கப்பட்ட இந்த கொடிய வைரஸ் அதன் பகுதியிலே நொடிப்பொழுதில் சீன அரசாங்கம் அழித்தது. அப்பொழுது 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஒரே நாளில் கொலை செய்யப்பட்டார்கள். இச் சம்பவத்தை வெளியிட்ட அந்நாட்டு ஊடகவியலாளர்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரையில் தெரியவில்லை. இக் கொடிய வைரஸ் தொடர்பிலான ஆராய்ச்சியில் ஈடுபட்டுவந்த வெளவால் பெண் என அழைக்கப்படும் ஷி ஜெங்லி என்பவருக்கு என்ன நடந்தது என்பதும் இதுவரையிலும் அறியப்படாத உண்மை. குறிப்பாக இவ் வைரஸ் தொடர்பாக தன்னை எந்த ஊடகங்களுக்கும் அல்லது நாடுகளுக்கும் தெரியப்படுத்தகூடாது என்ற எச்சரிப்பு விடுக்கப்பட்டிருந்தது. அப்படியாக இருந்தால் திட்டமிட்டே சீன அரசு ஒவ்வொரு நாட்டின் மீதும் தனது சர்வதிகாரத்தை திணிக்கும் வகையில் மாஸ்க், வென்டி லேட்டர், கொரோனா தடுப்பூசி போன்றவற்றை தமது நாட்டிலிருந்து பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாடே இவ்வாறான வைரசை பரப்பியது.

குறிப்பாக அபிவிருத்தியடைந்த நாடுகளும் அதனோடு சார்ந்த ஒரு சில நாடுகளும் தமக்கான கொரோனா தடுப்பூசிகளை தாமே தயாரித்துக்கொண்டார்கள். சீனா தடுப்பூசியை போட்டுக்கொண்டவர்களின் ஆயுட்காலம் குறைக்கப்பட வேண்டும். கருத்தடை ஏற்படுத்த வேண்டும் ஆண்மையற்ற சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும். இந்த தடுப்பூசியினூடாக பல வருடங்கள் கழித்து பாதகமான தன்மை உருவாக்கப்படும் என பல நாடுகள் எச்சரிக்கின்றது. அதன் காரணமாக சீன அரசாங்கத்தின் தடுப்பூசிகளை பல நாடுகள் பெற்றுக் கொள்ளவில்லை. தனது ஒருநிலைப்பிடிக்குள் உலக நாடுகளை கொண்டுவரவேண்டும் என்ற நிலைப்பாடு .திலும் நழுவிப்போனது ஆகவே மற்றுமொரு உத்தியை சீனா ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் கையாள வேண்டிய சூழல் உருவானது. அதனை தற்பொழுது திட்டமிட்ட வகையில் செயற்படுத்துவதற்கு இலங்கை தீவு முக்கியம் வாய்ந்ததாக அதனை கண்டறிந்துள்ளது. சீனா, இந்தியா, இஸ்ரேல் போன்ற நாடுகளை தனது கையடக்கத்துக்குள் கொண்டுவரவேண்டுமாக இருந்தால் இலங்கை தீவை தக்கவைத்துக்கொள்வதற்கான ஒரு நிலைப்பாட்டை சீனா நிச்சயம் கையில் எடுத்தாக வேண்டும். அமெரிக்காவை பொறுத்தவரையில் கூகுள் நிறுவனத்தினூடாக WWW. என்ற இணையத்தின் இயக்கமின்றி உலக நாடுகளில் எதுவும் இயங்க முடியாத சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. இன்று எந்தவொரு தொழினுட்பத்தை இயக்க வேண்டுமாக இருந்தாலும் இதனுடைய பாவனை இன்றி இயக்க முடியாது. அனைத்தும் இந்த WWW. என்ற முகவரிக்குள் அடங்கி விடுகின்றன. இவ்வாறான ஒரு அப்சை பல நாடுகள் உருவாக்கி வந்த பொழுதிலும் அவை அனைத்தும் அதில் தோல்வி கண்டுள்ளன. அனைத்து நாட்டின் பிரஜைகளையும் ஏதோவொரு வழியில் உள்வாங்கிக்கொண்டே உள்ளது. அதற்கு அவர்கள் அடிமையாகவே உள்ளனர்.

குறிப்பாக ஒரு நாட்டில் உள்ளவர்களை கண்டறிய வேண்டுமாக இருந்தால் பேஸ்புக், டுவிட்டர், வட்ஸ்அப், வைபர், இன்ஸ்டாகிராம் போன்ற பல அப்ஸ் உருவாக்கப்பட்டுள்ளது. ஆகவே ஒவ்வொரு நாட்டு பிரஜைகளின் தரவுகளும் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த இன்டர்நெட்டின் இயக்கங்கள் இன்றி தொழினுட்ப ரீதியாக இயங்கக்கூடிய எந்த வொரு விடயங்களும் இயங்க முடியாது. ஆகவே அதனை ஒரு குடையின் கீழ் சர்வ தேசயுனிட் கொண்டு வந்துள்ளது. இந்த சர்வதிகார தன்மையை ஒரு குடையின் கீழ் கொண்டு வரவேண்டும் என்ற சீனா எடுத்த இரசாயன ஆய்வு தான் கொரோனா வைரஸ். உலக மக்களிடையே வியாதிகளை பரப்பி அதனை செயலிழக்கின்ற மாத்திரைகளை தாமே தயாரித்து உலகளாவிய ரீதியில் அனைத்து நாடுகளையும் தமது கட்டுக் கோப்புக்குள் சர்வதிகார வரம்புக்குள் கொண்டுவர வேண்டும் என்பதே அவர்களுடைய நிலைபாடு. இதனோடு பல நாடுகள் விழித்துக்கொண்டதால் அந்த நாடுகள் தப்பித்துக்கொண்டன. ஆகவே இதற்கான மாற்றுவழி என்பது இலங்கைக்குள் இருந்து சீனாவை வெளியேற்ற வேண்டும் என்ற நிலைப்பாடே. அமெரிக்காவையும் இந்தியாவையும் ஆதரிப்பதன் செயற்பாடே சீனாவை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்கான நிலைமையை உருவாக்க முடியும். இல்லையென்றால் கொரோனா வைரஸினுடைய ஐந்தாம் அலையும் தாக்குகின்ற சூழல் உருவாக்கப்படும். நான்காம் அலையினுடைய இலங்கையினுடைய அனைத்து நிலைகளும் சம்பிதமடைந்துள்ள நிலையில் ஐந்தாம் அலையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறக்கும் சூழல் ஏற்படும். இரண்டு ஊசிகளை போட்டவர்கள் மட்டுமே தப்ப முடியும் என்ற சூழலை ஏற்படுத்தி கொடுக்கும் அதனை இலங்கை அரசாங்கம் செயற்படுத்தும்.

இன்று ஊசிகளை போடாதவர்களும் நலமுடன் வாழ்கின்றார்கள். ஊசி போடுவதனால் பாதக தன்மையை கொடுக்கும் என்று பலர் மறைந்து வாழ்கின்றனர். இவ்வாறான தன்மை தோற்றுவிக்கப்படுகின்றது. மரணங்களின் வீதம் உயரும்பொழுது யாருக்கு யார் உதவி செய்வார்கள் என்ற நிலை ஏற்படும். இதில் சுகாதார துறையினர் மீதோ மருத்துவர்கள் மீதோ நிர்வாகத்தினர் மீதோ குறைகூற முடியாது. நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் கோட்டபாய ராஜபக்ச அவர்கள் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும். குழி பறிப்பவனை அருகில் வைத்துக்கொண்டு நாம் எழுந்து வரமுடியும் என்று நினைப்பது முட்டாள்தனத்திலும் முட்டாள்தனம்.

இலங்கையில் 44 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு மீண்டும் வைரஸ் தாக்காது என்பதற்கு உத்தரவாதம் இல்லை. 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நோயாளர்கள் தற்பொழுது சிகிச்சை பெற்றுவருகின்றார்கள். 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மரணங்கள் திகழ்ந்திருக்கின்றது. 37 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் குணமடைந்துள்ளனர். சராசரி 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் ஒரு நாளைக்கு தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர். இந்த நிலைமை ஏதோவொரு வகையில் மாற்றப்பட வேண்டும் அதற்கு ஒரேயொரு வழி சீனா தனது இராஜதந்திரங்களை எவ்வாறு திணிக்கின்றது எதிர்வரும் காலங்களில் ஆயுதமின்றி வைரஸ்களை தாக்கும் பரீட்சாத்தமானதே வைரசின் தாக்கமாகும். ஆகவே புலனாய்வாளர்களின் கையில் இந்த நாட்டை ஒப்படைத்து சீனாவில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களில் எவ்வாறான பொருட்களில் வைரஸ் இருக்கின்றன காலப்போக்கில் எவ்வாறான பிரச்சனைகளை இது உருவாக்கும் என்பதை கண்டறிந்து பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

அவ்வாறு செய்வதன் மூலம் எந்தவொரு நாட்டின் இரசாயன தாக்கம் திணிக்கப்பட்டாலும் அதனை எதிர்கொள்வதற்கு இலங்கையிலுள்ள சுகாதார அதிகாரிகள் தம்மை தயார்ப்படுத்திக்கொள்வார்கள். சம்பந்தப்படாதவர்களை சுகாதார அமைச்சர்களாக்கி வைரஸ் தாக்கத்தினை கட்டுப்படத்துங்கள் என்று அவரிடம் பொறுப்பை விட்டுவிட அவர் ஆத்திலே முட்டியடித்து நீர் ஊற்றிய சம்பவம் நாட்டு மக்களை முட்டாளாக்கும் செயற்பாடாக அமையப்பெற்றது. தற்பொழுது குறித்த அமைச்சர் போக்குவரத்து அமைச்சராக செயற்படுகின்றார். நிலைமை இவ்வாறிருக்க துறை சார்ந்தவர்கள் அந்தந்த துறைகளில் அதற்கான கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளும் நிலைமைகளை உருவாக்க வேண்டும்.

அரசியல் சுயலாப நிலைமைக்காக தெருவில் இருப்பவர்களை கொண்டுவந்து சுகாதார அமைச்சராக நியமித்ததன் விளைவு 44 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிப்படைந்தும். 9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இறப்பை சந்திக்கவும் நேர்ந்தது. ஆகவே இதற்கு மிக முக்கிய காரணமாக ஆரம்ப புள்ளியாக செயற்பட்டுவந்த சீனா அரசாங்கத்தை நுட்பமான முறையில் வெளியேற்றுவதன் மூலம் எதிர்வரும் வைரஸை எதிர்கொள்ளும் சூழல் உருவாக்கப்படும். இன்றைய பொருளாதாரநிலை மிக மோசமான நிலையை அடைவதற்கு தனியே ஜனாதிபதியை குறை கூறிவிட முடியாது. அவர் ஜனாதிபதி ஆட்சி பொறுப்பை கொரோனா வைரஸ் தாக்கம் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் பொழுதே பொறுப்பேற்றார். அதன் பின்னர் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவ-தா என்ற நிலைப்பாட்டில் இருந்து மீண்டு வருவதற்கு இன்னமும் அவரால் முடியாமல் உள்ளது. வானத்தால் போன சனியனை ஏணி வைத்து இறக்கியது போன்று இன்று சீனாவை இலங்கை அரசு ஏணி வைத்து இறக்கியுள்ளது.

**11ஆம் பக்கம் பார்க்க...**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## நியூசிலாந்து சம்பவமும், இலங்கையின் கொவிட் பரவலும்

கொவிட் தொற்றின் தீவிரப் பரவலாலும், கொவிட் தொற்றின் வீரிய மிக்கத் திரிபுகளாலும், நிலைதடுமாறிப் போயுள்ள உலக நாடுகளுக்கு மத்தியில் இலங்கையும் பாரிய பின்னடைவைக் கண்டுள்ளது. கொவிட் திரிபான டெல்டா வைரசின் தாக்கம் காரணமாக இலங்கையில் நாளாந்த மரண வீதமும், தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தவண்ணம் உள்ளது. நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு எதிர்வரும் 13ம் திகதி வரையில் அமுல்ப்படுத் தப்பட்டுள்ளதுடன், அத்தியாவசியத் தேவை களுக்காக வீடுகளில் இருந்து ஒருவர் மாத் திரம் வெளியில் செல்ல அனுமதியும் வழங்கப் பட்டுள்ளதுடன், துரிதமாக நாட்டில் கொவிட் தடுப்பூசியினைச் செலுத்தும் பணிகளும் இடம்பெற்றுவருகின்றன. உலக சுகாதார நிறு வனமும் இலங்கையின் கொவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளது. மக்களை மிகவும் பாதுகா ப்பாக இருக்குமாறும், உரிய சுகாதார வழி முறைகளை உச்ச அளவில் பின்பற்றுமாறும் சுகாதாரத்துறையினரின் கோரிக்கைகள் வலுப்பெற்றவண்ணம் உள்ளது.

இந்த இன்னல்களுக்கு மத்தியில் நியூசிலாந்தில் கத்திக்குத்து சம்பவத்தின் மூலமாக இலங்கையினைச் சேர்ந்த நபர் ஒருவர் அந்நாட்டின் பொலிசாரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தின் பின்னணியில் அவர் ஐ.எஸ் அமைப்பின் சித்தாந்தங்களால் ஈர்க்கப்பட்டவர் என அந் நாட்டின் பிரதமர் தெரிவித்துள்ளார். விரி வான விசாரணைகள் அந்நாட்டில் ஆரம்பிக் கப்பட்டுள்ளவுடன், இலங்கை யின் புலனாய்வா ளர்களாலும் விரிவான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இலங்கை அரசுக்கு மீண்டும் புதியதொரு நெருக்கடிநிலை எழுந்துள்ளது என்றே கூறவேண்டும்.

முஸ்லீம் அடிப்படைத் தீவிரவாதி களால் கடந்த காலங்களில் இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் தின குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் இருப்பவர்களை இன்னமும் முழுமையாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்கான விசாரணைகள் இன்னமும் பூரணப்படுத்தப்படாமல் குற்ற வாளிகள் கண்டுபிடிக்கப்படாமல் சந்தேகத் தின் பேரில் பலர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் இச்சம்பவத்தின் பின்னணி யில் தான் இன்னமும் பிணை கூட வழங்கப் படாமல் தடுத்தும் வைக்கப்பட்டுள்ளனர். எனி னும் இவர்கள் குற்றவாளிகள் என்பதற்கான எதுவித ஆதாரமும் இன்னமும் அரசிடம் இல்லை. இக்கைது நடவடிக்கை ஒரு அரசி யல் பழிவாங்கல் என்றும் கூறப்பட்டு வரு கின்றது.

மேற்கூறப்பட்ட நியூசிலாந்து கத்திக் குத்து சம்பவத்துடன் தொடர்புபட்டவரும் ஒரு முஸ்லீம் நபர். அத்துடன் அவர் ஐஎஸ் அமைப்பினால் ஈர்க்கப்பட்டவர் என்கிற விடயங்களுக்கும், இலங்கையின் ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் பின்னணிக்கும் தொடர்புகள் உள்ளதா என்கிற கோணத்தில் தான் உலக நாடுகள் பார்க்கும். ஆறு நபர்களை கத்தியால் குத்தும் அளவிற்கு மூர்க்கமான ஒரு நபராக மாறியிருக்கும் குறித்த இளைஞர், நியூ சிலாந்து பொலிசாரினால் கண்காணிக்கப்பட்டு வந்தவர் என்கின்ற தகவலும் வெளியா கியுள்ளது.

எது எவ்வாறாயினும் உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவேண்டும். விசாரணைகள் விரிவாக்கப்பட்டு பேதமின்றி தண்டிக்கப்படவேண்டும். அதற்காக ஒட்டு மொத்த முஸ்லீம் மக்களையும் இச்சம்ப வங்களுடன் இணைத்துப்பார்ப்பது தவறு. சமூகத்திற்கு ஒத்துவராதவர்களை இனங்கண்டு அப்புறப்படுத்துவதே எதிர்காலத் திற்கு சிறந்தது.

# 158 உலக வரலாற்றில் குறுஞ்சமர்

அரச படைகளின் அல்லது சோவியத் படைகளின் (கணிசமான அளவு குறைய) ஆதார நிலைகள் மீதான இரவுத் தாக்குதல்களே பிரதான சமர் நடவடி க்கைகளாக இருந்தன. ஒவ்வொரு தாக்குதலின் பின்னரும் வீரர்கள் அடுத்த தாக்குதல் வரைக்கும் தங்குவதற்காகத் தத்தமது வீடுகளுக்குப் பிரிந்து சென்று விடுவர். சமரில் அவர்கள் திடமாகத் தமது செயற்பாடுகளை வெளிக்காட்டினார்கள். ஆனால், தூய இராணுவப் போக்கில் பார்த் தால், அவை அறிவற்ற செயற்பாடாக இருந் தன. ஆகவேதான், பெரியளவில் இழப்புக் குள்ளானார்கள்.

இஸ்மாயில் கானின் (வடக்கிலும் வட மேற்கிலும்) கோட்பாடு யாதெனில், ஒவ் வொரு கிராமத்திலும் 200 - 300 பேரைக் கொண்ட எப்பொழுதும் சமரிற்குத் தயா ராகவிருக்கின்ற, நன்றாக ஆயுதந்தரித்த, பயிற்றுவிக்கப்பட்ட படைப்பிரிவைக் கொண்டிருக்க வேண்டும் என்பதாகும். உண்மையில், இந்தக் கோட்பாடு செயலூ க்கமான தற்காப்பாகவே இருந்தது. ஏனெனில், படைப்பிரிவுகள் தமது கிராமங்களின் சுற்றுப்புறத்தில், அதனை விட்டு மிகத் தொலைவிற்குச் செல்லாமல் (அதிகூடிய தூரம் - 15 - 20 கி.மீ) சமரிட்டன. ஏனையவர்களைவிட அக்மட் ஷா மசூட் (வடக்கில்)பெரியளவிலும்வெற்றிகரமாகவும் சமரிட்டான். இவனது கோட்பாடு சீனாவி லும் வியட்நாமிலும் போரிட்ட கம்யூனிஸ்டுக் களின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். மசூட் மூன்று வகையான படைப்பிரிவுகளை உருவாக்கினான்:

அ) ஒவ்வொரு கிராமத்திலும் அப்பிர தேச மக்களைக் கொண்ட தற்காப்புப் படைப் பிரிவு.

ஆ) தமது தொடர்ச்சியான பிரதேச எல்லை க்குள் (எடுத்துக்காட்டாகக் கிட்டத்தட்ட இஸ்மாயில் கானின் படைப்பிரிவைப் போல) செயற்படுகின்ற படைப்பிரிவுகள் இலகு சுடுகலன்களுடனான 30 - 40 பேரைக் கொண்டதாக (வழக்கமாக இளை ஞர்கள்) இப்படைப்பிரிவு இருந்தது. மற்றை யவர்களுடன் ஒப்பிடுகையில், இவர்கள் சிறந்த இராணுவ, கொள்கைத் தயார்ப்படுத் தலுக்கு உள்ளானவர்களாக இருந்தார்கள். ஒவ்வொரு படைப்பிரிவும் இஸ்லாமிய "அரசி யல் கமிசார்" ஒருவரைக் கொண்டிருந்தது.

.) அனுபவமுள்ள வீரர்களைக் கொண்ட நடமாடும் படைப்பிரிவுகள். இவை தமது தளத்திலிருந்து கணிசமானளவு தொலை விற்குச் சென்று செயற்பட்டதுடன், குறி ப்பாகப் பிரதேசப் படைகளின் தற் காப்பிற்கு உதவுவதற்காகவும் சென்றன. இப்படைப்பிரிவுகள் மிகவும் சிறந்த ஆயுத ங்களைக் கொண்டிருந்தன. அவற்றில் கனரக ஆயுதங்களும் (பின்னுதைப்பற்ற எறிகணை செலுத்தி, மோட்டார்கள் போன்ற பல) அடங்குகின்றன. மூன்றாவது வகைப் படைப்பிரிவுகளின் மொத்த ஆளணி எண்ணிக்கை ஆப்கான் போரின் உச்சக் காலங்களில் கிட்டத்தட்ட 4000 பேரைக் கொண்டிருந்தது.

நகரக் கெரில்லாப் போர்க் கோட்பாடு (காபூல், கெராட், கந்தகார், ஏனைய ஒப்பீட்டளவில் பெரிய நகரங்கள் போன்றவற்றிலாகும்). பேசாவாரில் (பாகிஸ்தான்) வழங்கிய பேட்டி யொன்றில் அப்துல் காக் இக்கோட்பாட்டைப் பற்றி பின்வருமாறு விவரித்தார். "நகரில் கெரில்லாக்கள் வெடிபொருட்களையும் கைச் சுடுகலன்களையும் மாத்திரமே பயன்படுத் துகின்றார்கள். வீதிகளில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் சோதனைகளாலும் தேடல்களாலும் ஏனைய ஆயுதங்களைப் பயன்படுத்துவது சாத்தியமற்றது. எரிபொருள்



களஞ்சியங்கள், பாரவூர்திகளின் தொகுதிகள், சிறுமுகாம்கள், அரசாங்க நிறுவனங்கள் போன்றவற்றைக் கெரில் லாக்கள் வெடிவைத்துத் தகர்க்கின்றனர். இது தவிர நாங்கள் மின்சார வலையமைப்பு, அரச இயந்திரத்தொழில் ஆலைகள், சோவியத் படைகளதும் கைப் பொம்மைப் படைகளதும் ஆதார நிலைகள் போன்றவற்றைத் தகர்க்கின்றோம். விமானத்தளங்களில் நாசகார வேலை களை மேற்கொள்கின்றோம். அடிக்கடி நகருக்கு வெளியே .ருக்கின்ற மோட்டார் மற்றும் பல்குழல் எறிகணை செலுத்திகளின் சூட்டாதரவும் எமது நடவடிக்கைகளுக்குக் கிடைக்கின்றது".

கெரில்லாக்களின் சமர் நடவடிக்கைகளை நான்கு பிரதான வகைகளாகப் பிரிக்கலாம்.

அ) மலைப் பள்ளத்தாக்குகளினதும் கிராம ங்களினதும் தற்காப்பு பள்ளத்தாக்குகளுக் கு (கிராமங்களுக்கு) சோவியத் படைகள் வருவதற்கு முன்னர் கெரில்லாக்கள் சகல மக்களையும் மலைகளுக்கு அனுப்புகின் றனர். எடுத்துக்காட்டாக பான்ஜேரில் ஒரு சோவியத் முன்னேற்றத்தின் போது 35000 பேர் பின்வாங்கிச் சென்றார்கள். பள்ளத் தாக்கின் வாயில்களில் (கிராமங்களுக்கான வாயில்களில்) கண்ணித் தடைகள், கட்டுப் பாட்டுக் கண்ணிவெடிகள் போன்றவற்றை அவர்கள் பொருத்துவதுடன், கவச வாகன ங்களின் நகர்வைச் சிரமப்படுத்துவதற் கான தடையமைப்புக்களையும் உருவாக்கு கின்றார்கள். பக்கங்களிலிருந்தும் பின் பக்கத்திலிருந்தும் தாக்குதலைத் தொடுப் பதற்காக, பிரதான வீதிகளை வழக்கமாகத் திறந்த நிலையிலேயே விட்டுவைக்கின் றனர்.

ஆரம்பத்தில் சூட்டாயுதங்களாக இலகு சுடுகலன்கள் மாத்திரமே இருந்தன. ஆனால் படிப்படியாக அவை மோட்டார்களாகவும் முக்காலியில் பொருத்துகின்ற இயந்திரச் சுடுகலன்களாக வும் கனரக இயந்திரச் சுடுகலன்களாகவும் தன்னியக்க விமான எதிர்ப்புச் சுடுகலன் களாகவும் பல்குழல் எறிகணை செலுத் திகளாகவும் மாற்றங்கண்டன. இந்த ஆயுதங்களில் நில மறைப்புக்களில் (பதுக்கல் குழிகள்) வைக்கப்பட்டிருந்தன. ஆட்டிலறித் தாக்குதல்கள், விமானத் தாக்குதல்கள் போன்றவற்றிலிருந்து தற் காத்துக்கொள்ள முஜாகுதீன்கள் வழக்கமாக கற்பாறைக் குகைகளுக்குள் ஒளிந்து கொண்டார்கள். இங்கேயே அவர்களின் வெடிபொருள் களஞ்சியங்களும் அமைக்கப் பட்டிருந்தன.

ஆ) விநியோக வாகனத் தொடரணிமீது பதுங்கித் தாக்குதல்

இவ்வாறான பதுங்கித் தாக்குதலின் பிரதான இலக்காக, வழக்கமாக எரிபொ ருள் வாகனக்கொள்கலன்களே இருந்தன. இந்த மாதிரியான வாகனத் தொடரணியின் பாதுகாப்பு வழக்கத்தில் இரண்டு ராங்கிகள் (ரி - 54, 55, 62), இரண்டு கவசப் போக் குவரத்து வாகனங்கள், கனரக வாகனப் பிளாட்டூன் ஆகியவற்றைக் கொண்டதாக இருந்தது. முதலில் தாக்குதலுக்கு வசதியான இடத்தில் கண்ணிவெடியின் வெடிப்பினால் அல்லது கட்டுப்பாட்டு கண்ணிவெடித் தகர்ப்பினால் வாகனத் தொடரணி தடுத்து நிறுத்தப்படுகி ன்றது. உடனே எறிகணை செலுத்திகளால் ராங்கிகள் மீதும் கவசப் போக்குவரத்து வாகனங்கள் மீதும் தாக்குதல் தொடுக்கப் படுகின்றதுடன் இயந்திரச் சுடுகலன் களாலும் மோட்டார்களாலும் வாகனக் கொள்கலன்கள் பாரவூர்திகள் போன் றவற்றின் மேல் தாக்குதல் நடத்தப்படு கின்றது. இந்நேரத்தில் பதுங்கிச் சுடுபவர்கள் தற்காப்பை ஒழுங்குபடுத்துபவர்களைச் (அதிகாரிகள், இயந்திரச் சுடுகலனாள ர்கள்) சுட்டுக்கொல்வார்கள். பதுங்கித் தாக்குதலுக்குள் அகப்பட்டவர்களுக்கு உதவுவதற்காகப் பறந்துவந்த சோவியத் யுத்த உலங்குவானூர்திகளிலிருந்து முஜாகுதீன்களைக் கனரக இயந்திரச் சுடு கலன்கள் காப்பளிக்கின்றன. வாகனத் தொடரணி தாக்கப்படுகின்ற தருணத்தில் அவர்களுக்கு வான்வழி உதவி வந்து சேரக் குறைந்தது 20 நிமிடங்கள் செலவாகி ன்றது. ஆகவே தான் கூடுதலான சமயங்க ளில் முஜாகுதீன்களால் தாக்குதலைத் தொடுத்துவிட்டு அவ் விடத்திற்கு மேல் உலங்குவானூர்தி வருவதற்கு முன்னர் பின்வாங்கிவிட முடிந்தது.

திடமான நிலைகளையும் முகாம்க ளையும் முற்றுகையிடல் முற்றுகைத் தந்திரோ பாயம் யாதெனில், இரவில் மோட்டார், ஏவு கணைத் தாக்குதல்களினாலும் பகல் நேர த்தில் பதுங்கிச் சுடுபவர்களின் சூட்டாலும் வீதிகளில் ராங்கியெதிர்ப்புக் கண்ணிவெடி களைப் பொருத்தியும் நடைபாதைகளில் துருப்பெதிர்ப்புக் கண்ணிகளை வைத்தும் எதிரியைக் களைப்படையச் செய்வதாகும். மோட்டார், ஏவுகணை போன்றவற்றின் தளங்களைக் கெரில்லாக்கள் தொடர்ச்சியாக ஒரேநிலையில் வைத்திருக்கவில்லை. ஒவ்வொரு தடவையும் அவர்கள் அதனை மாற்றினார்கள். ஒப்பீட்டளவில் காபூலைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த படைகளுக் கெதிரான முற்றுகை மாத்திரமே வெற்றி யைத் தந்தது. இடையிடையே படைகளால் தாக்குப்பிடிக்க முடியாமல் போனதுடன் அவர்கள் ஒன்றில் தமது நிலையிலிருந்து பின்வாங்கி பிரதான படைகளின் அமைவி டத்திற்குச் சென்றார்கள். அல்லது சரணடை ந்தார்கள்.

தொடர்வான்...
நெற்றிபொறியன்

# சீனாவை எதிர்க்க துப்பில்லாத அரசு கொரோனா வைரஸிலிருந்தும்,கடனில் இருந்தும் மீள்வது எப்படி?



உலக நாடுகளை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் சீனா குறித்த சில நாடுகளை தன்வசம் வைத்திருப்பதற்காக கொடிய கொரோனா வைரஸை உலகம் முழுவதும் பரப்பிவருகின்றது. கிட்டத்தட்ட உலக சுகாதார அமைப்பு கண்டறிந்த வகையில் 193 நாடுகளில் அல்பா வைரசும், 170 நாடுகளில் டெல்டா வகை வைரசும், மியூ (MU) ஐந்து வகை உருமாற்றமடைந்த வைரசுகளும் அவதானிக்கப்பட்டு வந்துள்ளன. தற்பொழுது மியூ வைரஸ் என்பது ஊசிகளுக்கு தட்டுப்பாதவை என்று கூறப்படுகின்றது. இவ்வாறானதொரு சூழலில் சீன அரசு உலக நாட்டிலிருப்பவர்களை கொல்லுவதற்கான வழிவகைகளை மேற்கொண்டிருக்கின்றது எனலாம். எது எவ்வாறிருப்பினும் எமது நாட்டையும் எமது மக்களையும் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய தேவை எமக்கிருக்கின்றது. அந்த வகையில் நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அரசியல்வாதிகள், அரசியல் புத்திஜீவிகள், சமூக சேவையாளர்கள் அனைவரும் சிந்தித்து செயற்படவேண்டிய தேவை தற்போதைய காலகட்டத்தில் உருவாகியுள்ளது.

ஒரு காலகட்டத்தில் அனைத்திற்கும் போரை காரணம் காட்டிய இலங்கை அரசு இன்று சீன அரசாங்கத்தினால் திட்டமிட்டு உலகம் முழுதும் பரப்பப்பட்ட கொடிய கொரோனா வைரசை பற்றி அலட்டிக் கொள்ளாமல் இருக்கின்றது. அதுமட்டுமன்றி குறித்த சீன அரசிற்கு எதிராக எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. தொடர்ந்தும் சமூகங்களிற்கிடையே சமூகத்திற்கு இலங்கையில் கொரோனா வைரசின் தாக்கம் அதிகரித்து செல்கின்றது. இதன் காரணமாக இன்றைய காலகட்டத்தில் உலக வல்லரசுகளுடன் ஒப்பிடும் பொழுது இலங்கை பொருளாதாரத்திலும் அதனுடைய வேக வளர்ச்சியிலும் ஸ்தம்பிதமான நாடாகவே காணப்பட்டது. இதனை சாதகமாக கொண்ட உலக வல்லரசுகள் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் இலங்கையை ஒரு தளமாக கொண்டு செயற்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டார்கள்.

இன்றைய அதிநவீன உலகில் இலங்கையின் தொழினுட்பவியலாளர்கள் துரிதகதியில் செயற்படுவதனூடாக இலங்கையில் பரவுகின்ற வைரசின் தாக்கம் தொடர்பில் கண்டறிந்து எவ்வாறு இந்த வைரசின் தாக்கம் இலங்கைக்குள் உட்புகுத்தப்படுகின்றது அதனை தடுப்பதற்கான வழிகள் என்ன அவற்றிற்கான தீர்வு அதனோடு உலக நாடுகளின் பார்வை இலங்கையை வசப்படுத்தும் காரணிகள் போன்றவற்றையும் மக்கள் மத்தியில் வெளிப்படுத்த வேண்டும். இலங்கையானது 1948 ஆம் ஆண்டு சுதந்திரமடைந்தது என்பது பேச்சளவில் மட்டுமே அதன் நடை-டமுறை யில் 30 ஆண்டுகால போர் அதனோடு இனவாத யுத்தம் என பாரியதொரு பிரச்சனைகளை தோற்றுவித்தது. ஒரு நாட்டின் இராஜதந்திர நகர்வு என்பது எமது நாட்டை பாதிக்காத வகையில் இருக்க வேண்டுமே தவிர பரபரப்பை ஏற்படுத்தி அந்த நாட்டை குட்டிச்சுவராக்கும் செயற்பாடுகள் இருக்ககூடாது. உதவி என்ற போர்வையில் குறித்த நாடுகளை கடன் சுமைகளுக்குள்ளாக்கி தொடர்ந்தும் மீளா கடனில் அவர்களை அமுல்த்துகின்ற ஒரு செயற்பாடாகவே குறித்த வல்லரசுகள் செயற்படுகின்றன. எமது இலங்கை திருநாட்டை நாம் ஒரு வல்லரசாக மாற்றியமைக்க என்ன திட்டங்கள் இருக்கின்றதோ அத்தனை திட்டங்களையும் நாம் செயற்படுத்த வேண்டும். சீனாவை பொறுத்தவரையில் இலங்கை மீது அக்கறை கொண்டுள்ளது போல் நாடகமாடுகின்றது. அதேநேரம் பிராந்திய வல்லரசுகளை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. அதற்கு சாதகமாகவே இலங்கை தீவை தேர்ந்தெடுத்துள்ளது சீனா. இலங்கையின் கரையோர பகுதிகளை தன்வசப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக யாழ்ப்பாண தீவுகளில் தமது அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்ற சீன நிறுவனங்கள் அதன் பின்புலமாகவே தமது அரசியல் இராஜதந்திரங்களை நகர்த்தி வருகின்றது. ஒரு நாட்டுக்குள் சொல்லப்போனால் மதவாதம் இனவாதம் தேசியவாதம் இதனை வைத்தே அரசியல் இடம்பெறுவது வழக்கம்.

ஆனால் ஒரு நாட்டை இராஜதந்திர ரீதியில் சுபீகரித்துக்கொள்வது என்பது அந்த நாட்டின் பல பகுதிகளையும் விலைக்கு வாங்குவது என்பது ஒரு நாட்டை அபகரிக்கின்ற செயற்திட்டமாகும். கடந்த 60 வருட காலமாக இலங்கை இந்திய நட்புறவு என்பது அதனுடைய அன்டைய நாடு என்ற வகையில் பாரிய பங்களிப்பாகவே இருந்துவந்தது. மீண்டும் இந்தியா இலங்கையில் போராட்ட குழுக்களை வளர்த்தெடுக்கின்ற ஒரு நிலைமையை உருவாக்கும். காரணம் என்னவென்றால் அதை விட இந்தியாவிற்கு வேறு வழிகள் இல்லை. விடுதலைப்புலிகள் அல்லது ஏனைய ஆயுத குழுக்கள் பலம் பொருந்தியதாக இருந்தது இந்தியா தான். அவர்களே ஆயுத பயிற்சிகளையும் கடந்த காலங்களில் வழங்கியிருந்தனர். ஒரு நாட்டின் பொருளாதாரத்தை முதலில் வீழ்ச்சியடைய செய்தால் மட்டுமே அந்த நாட்டின் சொத்துக்களை அபகரிக்க முடியும். சீனாவால் பரப்பப்பட்ட குறித்த வைரசை அழிப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொண்டிருக்க வேண்டும். 2 அயிரத்திற்கும் மேற்பட்ட சீனர்கள் இலங்கையில் பணிபுரிகின்றனர். இவர்கள் யார் என்பதும் இவர்களுக்கு தெரியாது. உண்மையில் இவர்கள் புலனாய்வு நடவடிக்கைகளுக்காக நாட்டில் களமிறங்கியிருக்கின்றார்கள். இலங்கை தீவில் கட்டடங்களை நிர்மானிப்பது போன்று பாலங்களை நிறுவுவது போன்று பாதைகளை செப்பனிடுவது போன்று பணியாற்றும் இந்த பணியாளர்கள் சந்தர்ப்பம் சூழ்நிலைகளை பார்த்து இந்த நாட்டில் ஒரு சதி புரட்சியை ஏற்படத்தும் வகையில் இவர்களின் செல்வாக்கு வளர்ந்துவருகின்றது. சீன வங்கிகளும் இலங்கை திருநாட்டில் தற்பொழுது திறப்பதற்கான நூற்றுக்கு 90 வீதமான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு விட்டன. இலங்கை நாட்டுக்குள்ளேயே சீனாவின் பணம் செல்லுபடியாகும் என்ற ஒரு நிலைப்பாடு வந்தாலும் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. காலப்போக்கில் நிலைமை அவ்வாறு தான் மாற்றப்படும்.

ஒரு நாட்டில் பொருளாதாரமும் அதன் கையிருப்பும் சரியாக இருந்தால் மட்டுமே அந்த நாட்டை முன்னெடுத்து செல்ல முடியும். பல பொருட்களுக்கு இறக்குமதி தடையை விதித்த ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் எவ்வாறு அதனை மீள கட்டியெழுப்புவது என்பது பற்றி சிந்திக்கவில்லை. இதனால் பல நாடுகள் தற்பொழுது அரசாங்கத்தின் மீது சீற்றம் கொண்டுள்ளன. உதவி கரங்களை எழுப்ப மறுக்கின்றன. சீனாவை எதிர்க்க முடியாத ஒரு சூழலில் அவர்களின் கையை எதிர்பார்க்கும் சூழல் தற்பொழுது உருவாகியுள்ளது. மக்கள் போராட்டம் என்பது மகத்தான போராட்டம் சீன நாட்டை மக்கள் இலங்கையில் எதிர்க்கும் பொழுது இங்கு அவர்களுக்கு எந்த தேவையும் ஏற்படாதுபோகும்.

சீனாவுடன் செய்த ஒப்பந்தங்கள் இரத்து செய்யப்படும். இதனால் சீனா பலிவாங்கும் செயற்பாட்டை ஆரம்பிக்கும். இலங்கையில் சீனாவின் அபிவிருத்திகள் அனைத்தையும் முடக்கி அவர்களை நிராயுதபானிகளாக அனுப்புவதன் மூலம் சுபீட்சமான இலங்கையை கட்டியெழுப்பமுடியும். குறிப்பாக விடுதலைப்புலிகளின் போராட்டத்தை மலுங்கடிக்கவும் அவர்களை இல்லாது ஒழிக்கவும் குறிப்பாக 2000 - 2005 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் புடவை விற்பவர்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளிலும் புடவை வியாபாரம் செய்தார்கள். இவர்கள் இந்தியாவின் ரோவை (Raw) சேர்ந்தவர்கள். இவர்கள் தமது புலனாய்வு நடவடிக்கைகளினால் இலங்கையின் அனைத்து பாகங்களையும் வரைபடமாக்கிக்கொண்டனர். இந்தியாவின் ரோவை சேர்ந்த பலர் தமிழீழ விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டு தண்டனை வழங்கியதும் நாம் அறிந்ததே. அதன் காரணமாக விடுதலைப்புலிகளின் முக்கியதளபதிகள்தப்பித்துக்கொண்டார்கள். எதிர்வரும் நாட்களில் இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பி சீனாவின் நட்புறவை துண்டித்தால் மட்டுமே தொடர்ந்தும் சீனாவினால் அனுப்பப்படும் வைரஸ்களை எம்மால் எதிர்கொள்ள முடியும் என்பதே இன்றைய யதார்த்தம்.

**இரணியன்**

# ஆசிரியர்களின், கல்வி சார் அதிகாரிகள் நோக்கில் ஆசிரியம்




அகவிழி என்ற பெயரில் எமது அகவிழி திறந்து எம்மை எமது இருப்பின் சிறப்பைஉணர்த்தி, எமதும், எமது மாணவர்களின் கல்வி விருத்திக்குமாக நாம் பயன்படுத்திய சஞ்சிகை, மீண்டும் புதியதோர் உத்வேகத்துடன், “ஆசிரியம்” என்ற பெயரில் எமது கரம் சேர்ந்தது.

மிகுந்த மகிழ்ச்சியுடனும், ஆர்வமுடனும் ஆசிரியத்தைப் பெற்றுக்கொண்டு, கல்விசார் எனது நண்பர்கள், மற்றும் உயர் பதவிகளில் வகிப்போர் கரங்களில் சேர்க்கும் பெறுமதிமிக்க பணியை தன்னார்வத்துடன் மேற்கொள்ளத் தலைப்பட்டேன் அவ் வேளையில் ஆசிரியர்கள், அதிபர்கள், மற்றும் கல்விசார் உத்தியோகத்திர்கள் மத்தியில் ஆசிரியத்திற்கிருந்த வரவேற்பு, அதுதொடர்பான பிரதிபலிப்புக்களை அனுபவப்பகிர்வாக இங்கு முன்வைக்கின்றேன். இதன் நோக்கம் யாதெனின், கல்விசார் தற்கால விடயங்களையும், சமூதாயத்தில் நேரிய மாற்றத்துக்கான சிந்தனைக்குரிய தனித்துவங்களையும் தன்னகத்தே தாங்கி வெளிவரும் ஆசிரியத்தைப்பற்றிய தெளிவை கல்விச் சமூகத்தினரிடம் ஏற்படுத்த வேண்டிய தேவை உண்டு என்பதை உறுதிப்படுத்துதலாகும்.

“ஆசிரியம்” சஞ்சிகையின் பெயரைக் கேட்டவுடனேயே, “உங்களிடம் உள்ளதா? எனக்கு ஒன்று வேணும்” என்று கேட்டு உடனடியாக வாங்கி, ஆர்வமாக முகப்பு மற்றும் உள்ளடக்கங்களைப் பார்த்து அதன் கனதியை உணர்ந்துகொண்டதுடன், தனது நண்பருக்கும் சேர்த்து வாங்கிய ஆசிரியர்களைச் சந்தித்த போது, அவர்கள் கற்றலில் மேலும் ஆர்வம் கொண்டுள்ளமையை அறியமுடிவதுடன், அவர்கள் நிச்சயம் பாடசாலை மாணவர்களுக்கும், தமது சக ஆசிரியர்களுக்கும் வாசிப்பிற்கான முன்னுதாரணமானவர்களாகத் திகழ்வார்கள் என்பது தெளிவாகின்றது. “சேர், ஆசிரியம் சஞ்சிகை வந்திருக்குது. வாசிக்கிறீங்களா?” என்று கேட்க, தனக்கும், தனது ஆசிரியர்களுக்குமாக ஐந்து புத்தகங்களை பெற்றுக்கொண்ட அதிபர்களைப் பார்க்கும்போது, மிகவும் பெருமையாக இருந்தது. தான் மட்டும் வாசித்துப் பயன்பெறலாம் என்றில்லாமல், கொரோனாக் கெடுபிடியால் முடக்கப்பட்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில், தனது ஆசிரியர்களும் ஆசிரியத்தின் ஊடாகப்பயன்பெறட்டும் என்ற நேர்சிந்தனைக்கு பெரும் பாராட்டுக்கள்.

கல்விச்சமூகம் தமது பாடத்துக்குள்ளே நின்று மனமனம் செய்து சித்திபெறும் நிலைகடந்து, சிந்தித்துச் செயலாற்ற கல்வியை விரிசிந்தனைக்கான வாசிப்புடன் தொடர்புறுத்தவேண்டிய தேவையுண்டு. அதனை ஏற்படுத்தும் பணியை எமது நாட்டிலிருந்து வெளிவரும் ஆசிரியம் ஆற்றிவருகின்றது. இதனை பாடசாலை அதிபர்கள் அறிந்திருந்தால், அவர்கள் தமது பாடசாலை ஆசிரியர்களை வாசிக்கத் தூண்டுவார்கள் என்பதில் ஐயமில்லை. கல்விக் கல்லூரியிலிருந்து வெளியேறிப் புதிதாக நியமனம் பெற்று சேவையாற்றி வரும் ஆசிரியர்களிடம் ஆசிரியத்தை அறிமுகஞ்செய்தபோது, அவர்களும் வாங்கிக்கொண்டார்கள். அவர்களுடன் இதுபற்றிக் கலந்துரையாடியபோது, தாம் தமது பாடம் சார்ந்த விடயங்களை ஆசிரியத்தில் எழுதுவதற்கான களம் கிடைப்பது குறித்து ஆர்வமாகக் கேட்டுக் கொண்டதுடன், இதிலுள்ள விடயங்கள், தமக்கு எவ்வகையில் பயன்படும் என்பது குறித்தும் வினாவெழுப்பினர். அவர்களுக்கு தாம் மேலும் ஒரு சான்றதழ் அல்லது பட்டம்பெறுவதற்கு துணை செய்யும் நூலுக்கான தேடலாக ஆசிரியம் இருக்கவேண்டும் என்பதில் பேரார்வம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இந் நிலையுடன் அவர்கள் மேலும் மேலும் அறிவுத்தேடலுடையவர்களாக, எமது சமுதாயத்தின் விருத்திக்கான தொடர்ச்சியான ஆய்வுத்தளத்தில் நின்று இயங்குவதற்கான வாசிப்பைக் கொண்டிருப்பதற்கு ஆழமான வாசிப்பு உறுதுணைசெய்யும் என்பதை மனதிற் பதிக்க வேண்டிய தேவை இன்று மிகவும் அவசியமானதாகின்றது. பாடசாலைகளை வழிநடத்தும் கோட்ட, வலயக்கல்வி அலுவலகங்களில் பணியாற்றும் கல்விசார் உத்தியோகத்தர்களிடம் ஆசிரியம் சென்றடைந்தபோது, சிலர் தமக்கென ஒரு புத்தகத்தைப் பெற்றுக்கொண்டதுடன், ஒருசிலர், தமது நண்பர்களுக்குமாக மேலதிகமாக புத்தகங்களைப் பெற்றுக் கொண்டனர். இவ்விடத்தில், உயரதிகாரி ஒருவர், ஆசிரியம் அகவிழி என்ற பெயரில் வெளிவந்தபோது, தான் தொடர்ச்சியாக அதனை வாசித்ததன் விளைவே, தான் கல்வி நிர்வாகசேவைக்கான பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்றமைக்கான காரணம் என்று கூறி, தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார். போட்டிப் பரீட்சைகளுக்கான வாசிப்புடன், எம் அறிவை இற்றைப்படுத்த வேண்டிய தேவை உண்டு என்பதையும் கருத்திற் கொண்டு, உணர்ந்து வாசிக்கும்போது அத்தகைய வாசிப்பு எமது ஆளுமையில் மாறாத நல் மாற்றத்தை ஏற்படுத்தி விடுவதைக் காணமுடியும். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்களிடம் ஆசிரியத்தை வழங்கி இதுபற்றிக் கலந்துரையாடியபோது, “ஆசிரியம் பல்கலைக்கழக மாணவர்களுக்குத்தான் பயனுடையது, தமக்கு இதிலுள்ள விடயங்கள் தெரியும் என்றவிதத்தில் அவர்களுடைய பேச்சிருந்தது. அத்துடன் தாம் பெற்ற புத்தகங்களை மாணவகளிடம் விற்று முடித்துவிட வேண்டும் என்பதனையே தமது குறிக்கோளாகக் கொண்டிருந்தமையை அவர்களது அணுகுமுறை வெளிப்படுத்தியது.

ஆசிரியம் ஆசிரியர் மற்றும் வளவாளர்கள் மீதுள்ள மதிப்பு, விருப்பு என்பவற்றின் அடிப்படையில் அவர்கள் ஆசிரியம் சஞ்சிகையைப் பெற்றுக்கொண்டதாக உணரமுடிந்தது. மற்றும்படி அதனைத் தாமும் வாசித்து அதன் கனதியை மதிப்பீடு செய்து, இதுபோன்ற கட்டுரைகளை தாமும் சான்றாதாரங்களுடன் முன்வைக்க அவர்கள்முனைபவர்களாகதெரியவில்லை. தமது துறைசார்ந்த சிந்தனையில் மட்டும் தமது அறிவுப்பார்வையை மட்டுப்படுத்தும் பண்புடையவர்களாக அவர்கள் உள்ளமை வருந்தத்தக்கது. பரந்து விரிந்து ஆழ அறிவை வளர்க்கும் இடமான பல்கலைக்கழகத்தில் அறிவுத்தேடலுக்கான மட்டுப்பாடுகள் கல்விசார் உயர் வழிகாட்டிகளிடம் இருப்பது வலுவிழக்கப் படவேண்டும். இதற்காக பல்துறை சார்ந்த நூல்களை வாசித்து தம்மை செழுமைப் படுத்த வேண்டும். வாசிப்பில் ஆர்வமுள்ள நண்பர்கள் சிலரது கைகளில் ஆசிரியம் சென்றடைந்தபோது, அவர்கள் அதில் ஆசிரியரின் கட்டுரையை வாசித்துவிட்டு, இன்றைய உண்மை நிலையை மிகவும் தெளிவாகக் கூறியுள்ளமையைப் பற்றிக் கலந்துரையாடினர். அத்தோடு உள்ளடக்கப்பட்டகட்டுரைகள் சிலவற்றின் கருத்தாழம், சமகாலத்தில் பேசப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக தமது கருத்துக்களைத் தெரியப்படுத்தியிருந்தனர். அவற்றில் சிலவற்றை இங்கே பகிர்கின்றேன். சான்றிதழ் நோய் பற்றிய சிந்தனை, பதில் அல்லது கடமை நிறைவேற்று அதிபர் நியமனம், உத்தேச கல்விச் சீர்தருத்தம், அசலான கல்வி, கலைத்திட்டத்தில் காலணித்துவம் அகற்றல், சூம் உளவியல் - நற்பேறுகளுடன் இயைந்த உளவியல் அழுத்தங்களும் நெருக்கீடுகளும், கல்வியின்சமவாய்ப்பு இழப்பும், இலங்கையில் இராணுவ மயமாகும் கல்வி இயற்கைப் போராளி சுந்தர்லால் பகுகுணா, கொரோனா காலக் கல்விக் கலந்துரையாடல் ஆகிய தலைப்புக்களில் எழுதப்பட்ட விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இவற்றில் பல விடயங்கள் சமகாலக் கல்வி நிலை தொடர்பாகச் சிந்திக்கத்தக்கதாக இருப்பதாகவும், சிந்தனையைத் தூண்டும் வகையில் இருப்பதாகவும் கூறிய அதே வேளை, காலணித்துவம் எமது ஆழ்மன ஆணிவேர்வரை ஊறிப்போயுள்ள நிலையில், கலைத்திட்டத்தில் எப்படி இனி கலைத்திட்டத்தில் ஊடுறுவியுள்ள காலணித்துவத்தை இல்லாதொழிப்பது என்ற ஐயம் எழும்வகையில் விவாதம் உருவெடுத்தது. இயற்கைப் போராளி சுந்தர்லால் பகுகுணா பற்றிய கட்டுரை பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

ஆசிரியத்தில் இவரைப்பற்றி ஏன் பேசப்பட்டுள்ளது என்ற கேள்வி முன்வைக்கப்பட்டது. மரங்களையும், இயற்கையையும் நேசித்து 1927 முதல் 21-05-2021 வரை வாழ்ந்த இவருடைய வாழ்க்கை எமக்கு முன்னுதாரணமாகக் கொள்ளப்பட வேண்டும் என்ற நோக்கில் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டி மற்றுமொரு நண்பர் தனது கருத்தை முன்வைத்தார். போட்டி போட்டுக்கொண்டு பரீட்சைக்குத் தயாராதலையும், பரீட்சையில் சிறந்த பேறுபெறலையும் மட்டுமே தமது குறிக்கோளாகக் கொண்டு இயங்கும் நிலைமாறி இயற்கையை நேசிக்கவும், மரங்களை பாதுகாத்தலும் இன்றைய காலத்தின் தேவை என்பதனை எமது மாணவர்களுக்கும், சமுதாயத்திற்கும் எடுத்துரைத்தல் இன்றியமையாதது.

எனவே இதனை மிகச்சிறப்பாக இயற்கைப் போராளி சுந்தர்லால் பகுகுணா பற்றிய கட்டுரை எடுத்துக்காட்டியுள்ளமை பற்றிப் பேசி தெளிவு ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு ஆரோக்கியமான நட்புடனான கலந்துரையாடலுக்கு ஆசிரியம் எம்மிடையே புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளமையும் இங்கே குறிப்பிடத்தக்கது. நான்கு கல்வி சார்ந்த நட்பினரிடையே ஆசிரியம் தொடர்பான கலந்துரையாடலின் பின்னர் மனதில் புதிய தெம்பு ஏற்பட்டதையும் இங்கே எனது ஆசிரியம் தொடர்பான அனுபவப்பகிர்வில்வெளிப்படுத்துகின்றேன். இந்த அனுபவம் எனது ஆளுமையில் நேரிய சிறுதுளி மாற்றத்தை நோக்கிய நகர்விற்குஉட்படுத்தியதை பெறு வெற்றியாகக்கருதுகின்றேன்.

எனவே எதிர்வருங்காலங்களில் ஆசிரியத்தை வாசிப்பு வட்டத்திற்கான பேசுபொருளாகக் கொண்டு, நட்பு வட்டத்தை வலிமைப்படுத்துவதென்ற உறுதிப்பாடு மனத்திரையில் பதிந்துள்ளது. இதை விட இன்னும் சில அனுபவங்களாக, புத்தகத்தை வாங்கி முன்னும் பின்னும் உட்பக்கத்தையும் பெயரளவில் பார்த்து விட்டு, மீளத்தந்த நிலையும் உண்டு. எது எவ்வாறெனினும், எமது தமிழரின் கல்வி, சமூகம், சூழல், அறிவை வலுவூட்டல், மாற்றங்களுக்கு முகங்கொடுத்து புதிய உத்வேகத்துடன் முன்னேறுதல், வேண்டிய தேவையுடையவர்களாக உள்ளோம். அதற்கு ஆசிரியம் ஒரு சிறந்த கருவியாக உள்ளமை எனக்குக் கிடைத்த அனுபவம். “நாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்” என்ற திருமூலரின் வாக்கிற்கிணங்க, இன்றைய காலத்தின் தேவைக்கமைய ஆசிரியம் எமக்காக வெளிவருகின்றது.

“உள் நாட்டு வேட்டியைவிட வெளிநாட்டுக் கோவணம் உயர்ந்தது” என்ற மனநிலையை விடுத்து, எமக்காக எம்மை நாடிவரும் ஆசிரியம் சஞ்சிகை எமக்காக எம்மை வழிநடத்தத்தக்க கல்வியியலாளர்களால் செம்மைப்படுத்தப்பட்டு வெளிவரும் பொக்கிஷம் என்பதை உணர்ந்து, நாமும் எம்மைச் சார்ந்த கல்விசார் ஆர்வமுள்ளவர்களும் பெற்று வாசித்துப் பயன்பெறுவதோடு, எமது அடுத்த சந்ததியும் வாசிக்க ஊக்கப்படுத்துவோமாக.

# தலிபான்களை பயன்படுத்தியது போன்று விடுதலைப்புலிகளையும் அமெரிக்கா பயன்படுத்தும் எச்சரிக்கை!

இன்றைய பூகோள அரசியலின்படி உலகளாவிய ரீதியில் தமது ஆக்கிரமிப்புக்களை இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் ஆக்கிரமிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். சர்வதேச ரீதியில் தமது நாட்டினுடைய அதிகாரத்தை பயன்படுத்தும் நோக்கில் பொருளாதார ரீதியிலும் ஆயுத ரீதியிலும் யார் பெரியவர்கள் என்ற ஒரு நிலைப்பாட்டை குறித்த நாடுகள் கொண்டிருக்கின்றன. பூகோள ரீதியாக இலங்கையை இழந்துள்ள அமெரிக்கா தலிபானில் தனது ஆட்சியதிகாரத்தை எவ்வாறு பயன்படுத்தியதோ அதே போன்று இலங்கையிலும் அவ் ஆட்சியதிகாரத்தை கொண்டுவருவதற்கு அடுத்த காய் நகர்த் தல்களை நகர்த்தி வருகின்றது. ஆப்கானி ஸ்தானில் அமெரிக்க துருப்புக்கள் தரையிறங்க காரணம் என்ன என்பது பற்றி பார்க்கும் பொழுது அமெரிக்காவின் இரட்டை கோபுர தாக்குதலுடன் தொடர்புடைய ஒசாமா பில்லேடனை தாக்கி அழிப்பதற்காகவே பிரத்தியோகமாக அமெரிக்கா ஆப்கானில் களமிறங்கியது.

குறிப்பாக பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் போன்ற இடங்களில் 28க்கும் மேற்பட்ட தீவிரவாத அமைப்புக்கள் இயங்கி வருவதாக அமெரிக்க புலனாய்வு அறிவித்திருந்தது. இவர்களுள் பிரசித்தி பெற்ற முஸ்லிம் தீவிரவாதிகளாக அல்-கைதா, லக்சறிதொய்பா, ஹமாஸ், தலிபான் போன்ற தீவிரவாத அமைப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. உலகில் மொத்தம் 58 தீவிரவாத நாடுகள் இருக்கின்றன. இதிலும் கடல், வான், தரை என திகழ்ந்தவர்கள் தான் தமிழீழ விடுதலைப்புலிகள். குறிப்பாக இஸ்லாமிய தீவிரவாதிகள் அனைவருமே பெண்களை ஒரு கொத்தடிமைகளாகவே அல்லது அவர்களை விபச்சார இயந்திரங்களாகவே பயன்படுத்தி வருகின்றனர். கூடுதலாக அரபு நாடுகளில் இருக்கக்கூடிய சட்ட திட்டங்களாக பெண்களுக்கான சம அந்தஸ்து அல்லது முதலுரிமை மறுக்கப்பட்டதாகவே இருக்கின்றது. தலிபான் போராளிகள் ஆப்கானை கைப்பற்றியதுடன் பெண்களுக்கான சட்ட திட்டங்களை அறிவித்திருக்கின்றார்கள். அதன்படி தலிபான்கள் தற்பொழுது விதித்துள்ள தடைகள் :

**Football தடை !**
**காராட்டி தடை !**
**பெண்கள் தனியாக வெளியே போகதடை !**
**பெண்கள் கல்வி கற்க தடை !**
**பெண்கள் வேலை பார்க்க தடை !**
**ஆண்கள், பெண்கள் ஜீன்ஸ் உடை அணிய தடை !**
**பெண்கள் சைக்கிள்,பைக் ஓட்ட தடை !**
**தனியே பெண்கள் டாக்ஸியில் போக தடை !**
**ஆண்கள்,பெண்கள் ஒரே பேருந்தில் பயணம் தடை !**
**டிவிதடை ! வீடியோ தடை !**
**ஆண்கள் சவரம் செய்ய தடை !**
**பறவை நாய் வளர்ப்பு தடை !**
**இலக்கிய நூல் தடை !**
**கடைகளில் ஆண்கள் இருந்தால் பெண்களுக்கு பேச தடை !**
**ஆண் டாக்டர்கள் பெண்களுக்கு சிகிச்சையளிக்க தடை . !**
**பெண்களின் பள்ளிகள், கல்லூரிகள் மத கருத்தரங்கு கூடமாக மாற்றப்படும் !**
**பெண்களுக்கு நெயில்பாலிஷ், முகபூச்சு இருந்தால் விரல்கள் வெட்டப்படும் !**
**பெண் சத்தமாக சிரித்தால் பிரம்படி !**
**ஹைஹீல்ஸ் போட பெண்களுக்கு தடை !**
**பெண் நடக்கும் போது செருப்பு சத்தம் வந்தால் பிரம்படி !**
**பெண்கள் ரேடியோ டிவியில் பேச தடை !**
**பெண்கள் விளையாட்டு விளையாட தடை !**
**பெண்கள் வீட்டு பால்கனியில் நிற்க தடை !**
**வீட்டு ஜன்னல் கண்ணாடிகளில் கட்டாய பெயின்ட் !**
**பெண்களுக்கு ஆடை அளவோ , ஆடை தைத்து தரவோ ஆண்களுக்கு தடை !**
**பெண்களை படம் பிடிக்க தடை !**
**பத்திரிகைகளில் பெண்கள் படம் வர தடை !**
**வீடு, கடைகளில் பெண்கள் படம் மாட்ட தடை !**
**இசை, சினிமா, பாடல் என அனைத்துக்கும் தடை !**
**2021 '31 செப்டம்பருக்கு பிறகு இஸ்லாமிய பெயர் வைக்காதவர்க்கு தண்டனை !**
**ஆண்கள் முடிவெட்ட தடை**
**ஆண்கள் தாடி, தொப்பி , ஆப்கான் உடை கட்டாயம் .!**
**இஸ்லாமிலிருந்து வேறுமதம் மாறுவோருக்கு மரண தண்டனை !**
**2021' செப்டம்பர் -30 க்கு பிறகு இன்டர்நெட் தடை !**
**பெண்கள் செண்ட் பூச தடை !**
**பெண்களின் கொலுசு சத்தம் எழ தடை !**
**பெண்கள் பிற ஆணுடன் பேசதடை !**

இவ்வாறான சட்டங்கள் தலிபான் தீவிரவாதிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் போராட்டமானது விடுதலை சார்ந்த இனம் சார்ந்த போராட்டமாகும். பெண்கள் இரவு நேரங்களிலும் சுதந்திரமாக நடமாடுகின்ற நிலைமை உருவாக்கப் பட்டது. சம அந்தஸ்து வழங்கப்பட்டது. போர்க்களத்திலும் குடும்ப வாழ்விலும் விடுதலைப்புலிகளின் பெண் போராளிகள் பாரிய சாதனைகளை படைத்தார்கள். இவ்வாறான ஒரு ஒழுக்க கட்டுப்பாடுகளை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்திய தமிழீழ விடுதலைப்புலிகளை உலக நாடுகள் சேர்ந்து அழிப்பதற்கு காரணமாக அமைந்திருந்தன. அவ்வாறு ஒரு ஒழுக்கக்கட்டுப்பாட்டுடன் வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் அல்லது ஒரு தனி நாடு உருவாக்கப்படுமாக இருந்தால் இந்தியாவில் தமிழ் நாடு தனித்து உருவாக்கப்படும் ஒரு சூழல் காணப்பட்டது மட்டுமன்றி உலகளாவிய ரீதியிலும் அடக்குமுறைக்கு எதிரான கிளர்ச்சியாளர்கள் தோன்றி நாடுகளை பிரித்துவிடுவார்கள்.

ஆகவே தமிழீழ விடுதலைப்புலிகளை அங்கீகரிக்க கூடாது என்பதில் சர்வ தேச நாடுகள் முனைப்புடன் செயற்பட்டன. தற்பொழுது இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் விடுதலைப்புலிகளினுடைய மீள் உருவாக்கம் இந்த நாட்டில் சீனாவை வெளியேற்ற வேண்டும் என்ற நிலைப்பாடு தற்பொழுது எழுந்துள்ளது. சீனாவை இந்த நாட்டிலிருந்து விரட்டுவதற்கு இந்த நாட்டிற்குள் மீண்டும் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டத்தை முன்னெடுக்கும் ஒரு செயற்பாடு உருவாக்கப்பட வேண்டும். அதனை எவ்வாறு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளலாம் அல்லது பயன்படுத்த வேண்டும் என்ற காலசூழல் தற்பொழுது உருவாகியுள்ளது. அதற்கு சிறந்த உதாரணம் தான் அமெரிக்கா ஆப்கா னை ஆக்கிரமித்து 20 வருடங்களிற்கு பின் வெளியேறியது. இந்த வெளியேற்றத்தினால் பாரிய இழப்புக்களை தற்பொழுது ஆப்கானிலிருந்து வந்திருக்கும் மக்களும் சந்தித்துவருகின்றனர். குறிப்பாக தலிபான்களுக்கு எதிராக அந்த மாகாணங்களில் பஞ்சீர் போராளிகள் தலிபானுக்கு எதிரான தாக்குதல்கள் தீவிரமடைகின்றது. 500க்கும் மேற்பட்ட தலிபான்கள் இந்த தாக்குதலில் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். தற்பொழுது ஆப்கானின் நிலைமை மோசமடைகின்றது. இதில் அமெரிக்க அரசின் முக்கிய நோக்கம் என்னவென்றால் ஆப்கானில் இருக்கின்ற முஸ்லிம் தீவிரவாதிகளின் வலிமையை குறைப்பதாகும். அந்த நடவடிக்கையை குறித்த 20 ஆண்டு காலப்பகுதியில் அமெரிக்கா நிறைவேற்றியிருக்கின்றது. தற்பொழுதும் பாரிய பிளவு ஒன்றினை அமெரிக்கா ஏற்படுத்திவிட்டே நாட்டை விட்டு கடந்த 31 ஆம் திகதி வெளியேறியுள்ளது. இந்த வெளியேற்றமானது ஆப்கானில் 2 பிரிவுகள் தலிபானில் போரை முன்னெடுத்து வருகின்றனர். இதற்கிடையில் அமெரிக்காவை எதிர்ந்து அல்-கைதாவும் போரிடுகின்றது. அல்-கைதா தலைவரின் மேற்பார்வை பாதுகாவலர் ஒருவர் 1 நவம்பர் தொலைக்காட்சி ஒன்றில் தோன்றியிருப்பது தலிபான்களுக்கு இன்னும் பலத்தை சேர்த்துள்ளது என லாம். அமெரிக்காவின் வெளியேற்றத்தை தொடர்ந்து அந் நாட்டு மக்கள் ஒரு சிறை பிடிக்கப்பட்டவர்களாகவே தற்பொழுது வாழ்வார்கள் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.



குறிப்பாக பெண்களின் நிலைமை மோசமடைந்து காணப்படுவதாகவே ஆப்கானை விட்டு இறுதியாக வெளியேறிய பெண் ஊடகவியலாளர்அங்குபெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பிலும் தான் வெளியேறிய கனப்பொழுதிலும் தன் கண்முன்னே நடந்த சம்பவங்கள் பற்றியும் வெளிப்படையாக கூறியிருந்தார். எனது தாயக மண்ணை விட்டு எனது புகைப்பட கருவியுடன் வெளியேறுகின்றேன். நான் இந்த நாட்டிலிருந்தால் தலிபானியர்கள் என்னை கொன்றுவிடுவார்கள். எமது நாடு மீண்டும் ஜனநாயக வழிக்கு திரும்புமாக இருந்தால் நான் எனது நாட்டிற்கு மீண்டும் திரும்பி வருவேன் என்று கூறிவிட்டு அங்கிருந்து வெளியேறினார். குறிப்பாக ஆப்கானில் இயங்கி வந்த பல்கலைக் கழகங்கள் அவை அனைத்தும் இஸ்லாமிய அடிப்படை கல்வி கற்கும் நிலையங்களாக மாற்றப்படவிருக்கின்றது என்ற கருத்தையும் தலிபான் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். தற்பொழுது அமெரிக்கா ஆப்கானில் நிகழ்த் திய சம்பவம் போன்று இலங்கையில் வந்திறங்கிய இந்திய இராணுவம் சிங்களவர்களும் தமிழர்களும் மோதுவதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தி விட்டு வெளியெறியது. இதனுடைய வெளிப்பாட்டினாலேயே அந் நாட்டினுடைய அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி 21 மே 1991 அன்று கொல்லப்பட்டார். அதன் பின்னர் 25 ஆண்டுகால யுத்தம் இடம்பெற்று விடுதலை ப்புலிகளின் போராட்டத்தை முற்றாக மலுங் கடிக்கும் வகையில் சீனா, இந்தியா, அமெ ரிக்கா போன்ற நாடுகள் செயற்பட்டதன் விளைவு இன்று தமிழினம் சிங்கள ஆக்கிரமிப்புக்குள் வாழ வேண்டிய சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே அத்தகைய சூழலில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் வாழ முடியாத சூழல் இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக இந்திய அரசு இலங்கை தமிழர்களை பலிவாங்கியது என்றே கூறலாம். அது போன்று சீன அரசாங்கத்துடன் தற்பொழுது கைகோர்த்து கொண்டிருக்கும் ஜனாதிபதி அரசை வீழ்த்தி தமக்கு சாதகமானவர்களை இந்த நாட்டில் நியமிப்பதற்கு தற்பொழுது அமெரிக்கா முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தரான நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் தலைவர் உருத்திரகுமாரன் அமெரிக்காவின் நியூயோர்க் தலை நகரத்தில் வாழ்ந்து வருகின்றார். இவரை தவிர பல முக்கிய உறுப்பினர்களும் அங்கு வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கைக்குள் தனது காய் நகர்த்தல்களை அமெரிக்காவில் இருந்து நகர்த்துவதற்கான அனைத்தையும் நகர்த்தி வருகின்றது. ஆளில்லா விமானம் மூலம் கண்டம் விட்டு கண்டம் சென்றுவருகின்ற விமானங்களை தயாரித்து வருகின்றது. இதன் மூலம் குறித்த இழக்குகளை தாக்கியளிக்கும் செயற்பாடுகளை அமெரிக்கா கொண்டுள்ளது. தலிபான்களுக்கு ஆதரவாக இலங்கை அரசு செயற்படுவதையே அமெரிக்கா விரும்புகின்றது. அவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்ற பொழுது நிச்சயமாக இலங்கை அரசின் மீது தாக்குதல் ஒன்றை தொடுப்பதற்கு சிங்கள மக்களே முன்வருவார்கள். காரணம் இலங்கையில் இருக்கின்ற இஸ்லாமிய தீவிரவாதிகள் தலிபான்களுடன் இணைந்து மற்றுமொரு தீவிரவாத தாக்குதலை நடத் துவதற்கும் அவர்களுக்கான தனிஅலகை கோருவ தற்குமான காரணம் அமைந்து விடும்.

இதன் காரணமாக முஸ்லிம் மயமாக்கல் என்பது இலங்கையில் உருவாக்கப்படும் என்ற அச்சம் தற்பொழுது நிலவியுள்ளது. ஏற்கனவே இலங்கை அரசினால் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் அடக்கி ஆளப்பட்டு வருகின்றார்கள். இலங்கை ஒரு சமத்துவமான நாடு என்ற வகையில் முஸ்லிம் பெண்களுக்கான அடக்குமுறை அற்றவொரு நாடாக இருந்து வருகின்றது. இருந்த போதிலும் இங்கிருக்கும் நூற்றுக்கு ஐம்பது வீதமான பெண்கள் வீட்டுக்குள் அடைபட்டவர்களாக இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஒருவேளை சஹ்ரானின் குண்டுத்தாக்குதல் இடம்பெற்றிருக்கவில்லை என்றால் முஸ்லிம்கள் தமக்கான தனியலகை கோரி அதற்கான சட்டதிட்டங்களை வகுத்திருப்பார்கள். 7 திருமணம் என்ற விடயம் அவர்களுடைய இனத்தை விருத்தி செய்வதற்கான ஒரு தந்திரோபாயமாகும். அவர்களுடைய குர்ஆன் கூறுகின்றது முகமது நபி அவ்வாறு திருமணம் செய்துகொண்டால் அது போன்று நாங்களும் திருமணம் செய்து கொல்லலாம் என்பதே.

**நெற்றிபொறியன்**
**11ஆம் பக்கம் பார்க்க...**

# ஆப்கானில் அமெரிக்க படையின் வெறியாட்டம்

சோவியத் யூனியனுக்கு எதிராக அமெரிக்க ஆதரவுடன் பிரசவித்து... பாலூட்டி... தாலாட்டி.... பாகிஸ்தானால் வளர்க்கப்பட்ட தீவிரவாதம் முஹாஜிதீன் என்று ஆரம்பித்து தலிபான் என்ற இணைப்பாக பெரு விருட்சமாக வளர்ந்து கோலூச்சி ஆட்சியும் அமைத்தது ஆப்கானிஸ்தானில்இதுசோவியத்படைகளின்விலகலுக்கு பிந்தய காலகட்ட வரலாறு. தலிபான்கள் நம்பும் மத அடிப்படைவாதம்தான் அவர்களின் ஆட்சி மொழியாக இருந்தன. இந்நிலையில் தன் விருப்பமான சொல் கேட்காது வளர்ந்து விட்ட இந்த தீவிரவாதத்தை தறிக்க சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்த அமெரிக்காவிற்றுக்கு 911 என அறியப்பட்ட செப்ரம்பர் 11, 2001 அமெரிக்க இரட்டைக் கோபுரம் மீதான தாக்குதல் ஒரு காரணமாயிற்று.

தனது நாட்டிற்குள் வந்து தாக்குதல் நடத்தியது கடும் சினத்தை மட்டும் அல்ல கௌரவப் பிரச்சனையும் ஆகியது அமெரிக்காவிற்கு. இதன் அடிப்படையில் ஒரு கல்லில் பல மாங்காய் என்று ஈராக் ஆப்கானிஸ்தான் என்று தனது கழுகுக் கால்களை விரித்துக் கொண்டது அமெரிக்கா இதற்கு அதன் நேட்டோ கூட்டாளிகளும் ஒத்து பிடில் வாசித்தனர். அக்டோபர் 2001 இல், செப்டம்பர் 11 தாக்குதலில் ஈடுபட்டவர்கள் என்று கூறிக் கொண்டு ஒசமா பின் லாடன் மற்றும் அவரது அல்-காய்தா இன் உறுப்பினர்களை அவர்கள் தலிபான்களின் விருந்தினர்கள் என்ற வகையில் தம்மிடம் ஒப்படைக்க மறுத்ததால் தலிபான் ஆட்சியில் உள்ள ஆப்கானிஸ்தானை அமெரிக்கா ஆக்கிரமித்தது. இவர்களுடன் அமெரிக்காவின் நேட்டோ நட்பு நாடுகளும் இணைந்து கொண்டன. ஆரம்ப படையெடுப்பின் போது, அமெரிக்க மற்றும் இங்கிலாந்து படைகள் அல்-காய்தா பயிற்சி முகாம்கள் மீது குண்டு வீசின, பின்னர் ஆப்கானிஸ்தானில் செயற்பட்ட வடக்கு கூட்டணியுடன் இணைந்து செயற்பட்டு தலிபான் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்தனர்.

மேலும் அமெரிக்காவும் நேட்டோ நட்பு நாடுகளும் உலகின் பல நாடுகளிலும் மனிதாபிமான செயற்பாட்டை செய்தல்.... ஜனநாயகத்தை மீட்டல்... தீவிரவாதத்தை இல்லாமல் செய்வதில் தாங்களே உலகப் பொலிஸ்காரர்கள் வழிகாட்டிகள் என்பது போன்ற செயற்பாட்டில் ஆப்கானிஸ்தான் ஈராக்கில் தமது ஆக்கிரமிப்பிற்கு நியாயங்களை காட்டி நின்றனர். முதலில் போரை தொடுப்பதற்காக நியாயங்கள் உள்ளது போன்ற பிரச்சாரங்களை தமக்கு சாதகமான பிரபல்ய ஊடகங்கள் மூலம் ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கு முன்பு மிக நேர்த்தியாக செய்ய ஆரம்பிப்பர்.

அமெரிக்க மக்களை ஏன் உலக மக்களை இது ஆக்கிரமிப்பு யுத்தம் அல்ல ஜனநாயகத்தை மீட்பதற்காக யுத்தம் என்று எண்ணும் படியான கருத்தியலை ஓரளவிற்கு ஏற்படுத்துவதில் அமெரிக்கா 'வெற்றிகரமாக' செயற்பட்டனர் என்றே கூற வேண்டும். இதன் பின்பு அவர்களுக்கு சார்பான அந்தந்த நாடுகளின் உள்ளூர் தீவிரவாதிகளுக்கு பணம் ஆயுதம் ஆலோசனையை வழங்குதல் பின்பு போரைத் தொடங்குதல் என்று ஆரம்பிப்பதே அமெரிக்க 'மனிதாபிமான' யுத்தங்கள் ஆகும்.

இதில் அதிகம் தரை மார்க்கமாக அமெரிக்க படைகள் நகருதலை சோமாலியாவில் அவர்களுக்கு கிடைத்து பாரிய இழப்பும்... அனுபவங்களும் கூடவே அமெரிக்க மக்களிடம் தமது பிள்ளைகள் அநியாயமாக சாகடிக்கப்படுகின்றார்கள் என்ற எதிர்ப்பு நிலையை சமாளிக்கும் முகமாக ஆகாய மார்க்கமாக தாக்குதலை அதிகம் செய்தல் மூலம் நாடுகளுக்கு எதிரான யுத்தங்களை செயற்படுத்தினர். இம்முறையையே ஆப்கானிஸ்தானிலும் 2001 அக்டோபரில் நடைமுறைப்படுத்தினர். இங்கும் ஆகாயத் தாக்குதல் என்ற வார்த்தையை தவிர்த்து ஆகாய மார்க்க பிரச்சாராம்(Air campaign) என்பது போன்ற சொல்லாடலைப் பாவிப்பது என்பதுமாக ஆப்கானிஸ்தான் அமெரிக்க கூட்டமைப்பு படைகளிடம் 2001 இறுதியில் இல் வீழ்ந்து. தலிபான்கள் தமது முக்கிய தலைவர்கள் பாதுகாப்பான இடங்களில் மறைந்தும் கொண்டனர். இதற்கு பாகிஸ்தான் ஆப்கானிதானில் எல்லை பூராக தரையால் இணைக்கப்பட்டிருந்ததும் பெரும் உதவியாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து தமக்கு சார்பான ஒரு அரசை அங்கு நிறுவுவதற்கான தேர்தலை நடாத்துவது.... அமையும் பொம்மை அரசை தமது விருப்பத்திற்கு ஏற்ப நடாத்துவது என்ற 'ஜனநாயக' வழி முறையைத்தான் ஆப்பானிஸ்தானில் நடாத்தினர் அமெரிக்க கூட்டமைப்பினர். இதில் உள்ளூர் ஆப்கானிஸ்தான் அரசியல் தலைவர்கள் பணியாளர்கள் தமது நாட்டின் செயற்பாட்டில் பொதுப் போக்கில ஈடுபட்டனர். இவ்வாறு அரசு அமைப்பதுவும் நிர்வாகத்தில் பங்கு பற்றுவதற்கும் எதிர் நிலையாக அமெரிக்காவின் படையிடம் தமது ஆட்சியை இழந்த தலிபான்கள் துரோகிகளின் செயற்பாடாகவே கருதினர். அமெரிக்க படைகளின் பிரசன்ன காலமாகிய கடந்த 20 வருடங்களும் நிலமை இவ்வாறு தான் நகர்ந்தது.

தொடர் ஆயுத மோதல்களாக நகர்ந்த இருபது வருடங்களில் மற்றைய எந்த நாடுகளையும் விட ஆப்கானிஸ்தானின் புவியியல் அமைப்பு தலிபான தீவிரவாதிகளின் மறைவிடங்களை முழுமையாக எந்த நவீன ரக ஆயுதங்களைக் கொண்டு அடக்க அழிக்க முடியவில்லை. கூடவே அருகில் எல்லைகள் முழுவதும் பரந்திருக்கும் பாகிஸ்தானின் தரையால் உள்ள இணைப்பு இந்த தீவிரவாத அமைப்புகள் பாகிஸ்தானை தமது மறைவிடமாக பாவிப்பதற்கு இருந்து ஏதுவான 'தப்ப வெப்ப" நிலமையையும் இந்தத் தீவிரவாதிகளுக்கு எதிரான நிலைப்பாட்டுடன் பாகிஸ்தானில் ஆட்சியை தொடருதல் ஏன் உயிர்வாழுதல் என்பது கடினமானது என்ற 'ஜனநாயகத்தை" பாகிஸ்தான் கொண்டிருந்ததும் தலிபான்கள் ஆப்கனிஸ்தானில் நிலைத்து நிற்பதற்கு முக்கிய காரணமாகியது. கூடவே தலிபான் தரப்பிலும் அமெரிக்க கூட்டமைப்பு படைகள் ஆப்கானிஸ் தான் அரசு என்று முத்தரப்பிலும் போதைவஸ்தில் உலக சந்தையில் பெருந் தொகை பணமீட்டல் என்பது இங்கு இந்த போர் தொடர வேண்டும் என்று முத்தரப்பினரும் விருப்பத்துடன் இருந்த துர்ப்பாக்கிய நிலமையை நாம் புறம் தள்ளிவிட முடியாது.

அமெரிக்க கூட்டமைப்பு படைகளின் பொது மக்களுக்கு எதிரான தாக்குதல் பெண்களுக்கு எதிரான செயற்பாடுகள் மக்களின் வாழ்வை மேம்படுத்த முடியாத ஆப்கான அரசின் செயற்பாடுகள் என்பன பொது மக்களை தலிபான், ஏனைய தீவிரவாத அமைப்புக்கள் பக்கம் மக்கள் சாய்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தியது. உலக நவீன ஆயுதங்கள் பல லட்சம் பயிற்சி அளிக்கப்பட்ட ஆப்கான அரசு படைகள் என்று யாராலும் வெல்லப்பட முடியாத அதே வேளை அமெரிக்க அதன் கூட்டமைப்பு நாடுகளின் டாலர்களை தின்று கொண்டிருந்த அவமானகரமான யுத்தமாக அமெரிக்க அரசினால் உணரப்பட்டாலும் உலகப் பொலிஸ்காரனாக செயற்படும் அமெரிக்காவின் கௌரவ பின்வாங்கல் அவர்களால் செய்ய முடியவில்லை. ஆனால் டொனால் ட்ரம் போன்ற ஒரு 'வித்தியாசமான' அமெரிக்க ஜனாதிபதிஎடுத்த தீர்மானமேஒருகௌரவமான பின்வாங்கலை ஜோ பைடன் செய்வதற்கு வாய்ப்பை ஏற்படுதியது. சில வருடங்களுக்கு முன்பு தலிபான சீனா இடையில் ஏற்பட்ட தொடர்பும் அதனைத் தொடர்ந்து சீனாவை தலிபான்களிடம் கோர்த்துவிட்டுக்கழரநினைத்தஅமெரிக்காவின் முயற்சிகளில் சீனா இராணுவ ரீதியில் சிக்கிக் கொள்ளாமல் 'வெற்றி' கண்டது உலக செய்தி ஊடகங்களில் அதிகம் பேசப்படா



விட்டாலும் வரலாற்று உண்மைகள் இவை. அமெரிக்கா ஆப்கானில் தங்கியிருந்து காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் மிகக் குறைந்த அளவிலான மக்களே தேர்தலில் பங்குபற்றினர் என்பதற்கு உருவாகப் போகும் ஜனநாயக அரசியல் மக்களுக்கு இருந்த நம்பிக்கையீனங்களும் கூடவே தேர்தலில் பங்கு பற்றினால் தலிபான்களின் துப்பாக்கிக் கோவத்திற்கு ஆளாகலாம் என்பதால் அதனைத் தவிர்த்த செய்றபாடுகள் என்பன காரணங்களாக அமைந்தன. இது ஒரு பொதுவான போக்குத்தான். நாம் இதனை இந்தியப் படைகளின் பிரசன்ன காலத்தில் இலங்கையில் சிறப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் அன்றைய காலகட்டத்தில் நடைபெற்ற தேர்தலிகளிலும் கண்டோம். அமெரிக்படைகளின் பிரசன்ன காலத்தில் ஹமீத் கர்சாய் 2001 முதல் 2014 வரை நாட்டின் தலைவராக இருந்தார். டிசம்பர் 2001 இல், தாலிபான் அரசாங்கம் கவிழ்க்கப்பட்ட பிறகு, ஹமீத் கர்சாயின் கீழ் ஆப்கான் இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்பட்டது. கர்சாய் நிர்வாகத்திற்கு உதவுவதற்கும் அடிப்படை பாதுகாப்பை வழங்குவதற்கும் சர்வதேச பாதுகாப்பு உதவிப் படை ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலால் நிறுவப்பட்டது.

2001 இற்கு முன்பு இரண்டு தசாப்த கால யுத்தம் மற்றும் கடுமையான பஞ்சத்திற்குப் பிறகு, ஆப்கானிஸ்தான் உலகின் மிக உயர்ந்த குழந்தை மற்றும் குழந்தைகள் இறப்பு விகிதங்களில் ஒன்றாக காணப்பட்டது. குறைந்த ஆயுட்காலத்துடன் பெரும்பாலான மக்கள் பசியுடன் இருந்தனர், மற்றும் உள்கட்டமைப்புகள் யுத்தங்களால் இடிபாடுகளின் நடுவேயே காணப்பட்டன. பல வெளிநாட்டு நன்கொடையாளர்கள் போரால் பாதிக்கப்பட்ட நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப ஆளணி உதவி மற்றும் பொருட்கள் உதவிகளை வழங்கத் தொடங்கினர். இதற்கிடையில், தலிபான் படைகள் பாகிஸ்தானுக்குள் மீண்டும் ஒருங்கிணைக்கத் தொடங்கின, மேலும் கூட்டணிப் படைகள் ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்து புனரமைப்பு செயல்முறைக்கு உதவின. ஆப்கானிஸ்தானின் கட்டுப்பாட்டை மீட்க தலிபான் கிளர்ச்சியை தொடங்கியது. அடுத்த தசாப்தத்தில், சர்வதேச பாதுகாப்பு உதவிப் படை மற்றும் ஆப்கான் துருப்புக்கள் தலிபான்களுக்கு எதிராக பல தாக்குதல்களை நடத்தின, ஆனால் அவற்றை முழுமையாக தோற்கடிக்க முடியவில்லை. வெளிநாட்டு முதலீடு இல்லாதது, அரசாங்க ஊழல் மற்றும் தலிபான் கிளர்ச்சி காரணமாக ஆப்கானிஸ்தான் உலகின் ஏழ்மையான நாடுகளில் ஒன்றாக பயணப்பட்டது. இதற்கிடையில், கர்சாய் நாட்டின் மக்களை ஒன்றிணைக்க முயன்றார், மற்றும் ஆப்கானிஸ்தான் அரசாங்கம் சில ஜனநாயக கட்டமைப்புகளை உருவாக்க முடிந்தது. 2004 இல் ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய குடியரசு என்ற பெயரில் ஒரு அரசியலமைப்பை உருவாக்கப்பட்டது. நாட்டின் பொருளாதாரம், சுகாதாரம், கல்வி, போக்குவரத்து மற்றும் விவசாயத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் பெரும்பாலும் வெளிநாட்டு நன்கொடை நாடுகளின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டன. சர்வதேச பாதுகாப்பு உதவிப் படைகள் ஆப்கான் தேசிய பாதுகாப்புப் படைகளுக்கு பயிற்சி அளிக்கத் தொடங்கின. 2002 ஐத் தொடர்ந்து, கிட்டத்தட்ட ஆப்கானிஸ்தானுக்கு வெளியில் அகதிகளாக இருந்த ஐந்து மில்லியன் ஆப்கானியர்கள் நாட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்டனர். ஆப்கானிஸ்தானில் இருந்த நேட்டோ படைகளின் எண்ணிக்கை 2011 இல் 140,000 ஆக உயர்ந்தது, 2018 இல் சுமார் 16,000 ஆக குறைந்தது. செப்டம்பர் 2014 இல் அஷ்ரப் கானி 2014 ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு ஜனாதிபதியானார். அங்கு ஆப்கானிஸ்தானின் வரலாற்றில் முதன்முறையாக அதிகாரம் ஜனநாயக ரீதியாக மாற்றப்பட்டது. தொடர்ந்து 28 டிசம்பர் 2014 அன்று, நேட்டோ ஆப்கானிஸ்தானில் சர்வதேச பாதுகாப்பு உதவிப் படைகள் போர் நடவடிக்கைகளை முறையாக முடித்து, ஆப்கான் அரசு நாட்டின் முழு பாதுகாப்புப் பொறுப்பை பொறுப்பேற்றுக் கொண்டது. ஆனால் நேட்டோ படைகள் ஆப்கானிஸ்தான் மண்ணில் நிலை கொண்டு இருந்தன. ஆயிரக்கணக்கான நேட்டோ துருப்புக்கள் ஆப்கானிய அரசாங்கப் படைகளுக்கு பயிற்சி அளிப்பதற்கும் ஆலோசனை வழங்குவதிலும் ஈடுபட்டனர்.

2015 இல் மதிப்பீட்டின்படி ஆப்கானிஸ்தான் போரில் 2001 முதல் சுமார் 147,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் 38,000 க்கும் அதிகமானோர் பொதுமக்கள்". பாடி கவுன்ட் என்ற தலைப்பில், ஆப்கானிஸ்தானில் நடந்த மோதலில் 106,000 தொடக்கம் 170,000 வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையிலும் தலிபான்களை அவர்களின் அமெரிக்க விருப்பு அரசுக்கு எதிரான செயற்பாடுகளை எஞ்சிய நிலையில் தங்கியருந்த நேட்டோ படைகளுக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்ந்தன. தலிபான்களை தம்மால் வெற்றி கொள்ள முடியாது என்பதுவும் ஏழு ட்றில்லியன் வரையலான வழங்களில் மிகச் சிறிய பகுதியையேனும் தம்மால் வறுக முடியவில்லை என்பதுவும் ஆனால் தினம் தினம் பணம் உயிர் விரயமாவதை உணர்ந்து நேட்டோ படைகள் ஒவ்வொன்றாக கழர தொடங்க அமெரிக்கா 'மாயநிலை'யில் தனிமைப்படுத்தப்பட்ட நிலைமையை உணர்ந்தது. தோல்விகரமாக பின்வாங்குதல் என்பதில் இருந்து.... தம்மை விடுவித்துக் கொள்ளுதல் என்பதை தாம் ஆப்கானிஸ்தானுக்கு சென்ற ஜனநாயக மீட்பு மனிதாபிமான செயற்பாடுகள் முடிவடைந்து விட்டன. ஆப்கானிஸ்தான் அரசை காத்துக் கொள்ள மூன்று இலட்சம் படைகள் தம்மால் பயிற்றுவிற்கப்பட்டு தயார் நிலையில் உள்ளனர் என்று கூறி கொண்டு 2021 ஆகஸ்ட் மாதம் 31 இற்குள் தமது முழுமையான விலகலை செய்வது என்று தலிபானுடன் ஏலவே நடைபெற்ற நீண்ட சந்திப்புகளின் அடிப்படையில் ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் படைவிலகலை ஆரம்பித்தனர்.

**தொடரும்...**



# பிராந்திய செய்திகள்



## இலங்கையில்கடன் பெற்றவர்களுக்கான சலுகைக்காலத்தை நீடிப்பதற்கு மத்திய வங்கி தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது

கடன் பெற்றவர்களுக்கான சலுகைக்காலத்தை நீடிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நாட்டில் நிலவும் கோவிட் தொற்று பரவல் நிலை மற்றும் இதனால் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

அதன்படி குறித்த விடயங்களால் பாதிக்கப்பட்டுள்ள வர்த்தகர்கள் மற்றும் தனிநபர்களுக்காக வழங்கப்பட்டுள்ள கடன் சலுகையை எதிர்வரும் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை நீடிக்க இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் வங்கிகள் மற்றும் அனுமதி பெற்ற வணிக நிறுவனங்களுக்கு சுற்று நிரூபத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட தரப்பினர் முன்வைத்த கோரிக்கைகளை அடிப்படையாக கொண்டு இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

கடன் பெற்ற, பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைக்கு அமைவாக வங்கிகள் இந்த சலுகையை வழங்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


## நாட்டில் கொரோனா பலி எண்ணிக்கை 10 ஆயிரத்தை எட்டியது

நாட்டில் மேலும் 202 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சற்றுமுன்னர் உறுதிப்படுத்தினார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 9,806 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, இந்நாட்டு மொத்த கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 451,401 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றில் இருந்து இதுவரை பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 380,166 ஆக அதிகரித்துள்ளது.



## வானிலை தொடர்பான அறிவிப்பு!

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மேகமூட்டமான வானம் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பல இடங்களில் குறிப்பாக மாலை வேளையில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் காலை வேளையிலும் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

சூரியனின் தொடர்பான தென்திசை நோக்கிய இயக்கத்தின் காரணமாக இவ் வருடம் ஒகஸ்ட் மாதம் 28 ஆம் திகதியிலிருந்து செப்டம்பர் மாதம் 07ஆம் திகதி வரை இலங்கையின் அகலாங்குகளுக்கு நேராக உச்சம் கொடுக்கவுள்ளது. இன்று (03 ஆம் திகதி) மாரவில, நாரம்மல, மாவத்தகம, கிராந்துருக்கோட்டை மற்றும் மண்டூர் ஆகிய பிரதேசங்களுக்கு மேலாக நண்பகல் 12.09 அளவில் சூரியன் உச்சம் கொடுக்கவுள்ளது.

## பாடசாலை மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி வழங்கும் இயலுமை உள்ளது -ஜனாதிபதி

மருத்துவ அனுமதி கிடைத்தவுடன் பாடசாலை மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசியை வழங்குவதற்கான இயலுமையுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.அன்று நடைபெற்ற கொரோன ஒழிப்பு விசேட குழுவின் கூட்டத்தில் கலந்து கொ ண்டு ஜனாதிபதி இதனை தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தடுப்பூசியேற்றும் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது. 20 முதல் 29 வயதிற்கு இடைப்பட்ட பிரிவினருக்கு தடுப்பூசியேற்றும் நடவடிக்கையை அடுத்த 02 வாரங்களுக்குள் முடிவுக்கு கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.



## பலாலி தையிட்டி பகுதியில் மோட்டார் குண்டொன்று கண்டுபிடிப்பு

பலாலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தையிட்டி பகுதியில் உள்ள காணி ஒன்றிலிருந்து மோட்டார் குண்டு ஒன்று இன்றைய தினம் கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த காணி உரிமையாளர் காணியை சுத்தம் செய்யும் போதே குறித்த மோட்டார் குண்டு அவதானிக்கப்பட்டது.

பலாலி பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து அதனை மீட்பதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வியாபாரிகள் மீதான அபராத தொகை அதிகரிப்பு

நுகர்வோர் விவகார திருத்தச் சட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை (06) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய பொருட்களின் விலையை வேண்டுமென்றே உயர்த்தும் மற்றும் கட்டுப்பாட்டு விலையை விட அதிகமாக விலைக்கு பொருட்களை விற்பனை செய்யும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக இந்த சட்டம் திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரவித்துள்ளார்.

அதனடிப்படையில் தனிநபர் வியாபாரதிற்கான அதிகபட்ச அபராதம் 20,000 ரூபாவில் இருந்து 10 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு நிறுவனத்திற்கான அதிகபட்ச அபராதம் 200,000 ரூபாவில் இருந்து 1 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தனிநபருக்கான குறைந்தபட்ச அபராதம் 1,000 ரூபாவில் இருந்து 10,000 ரூபாவாகவும், ஒரு நிறுவனத்திற்கான குறைந்தபட்ச அபராதம் 10,000 ரூபாவில் இருந்து 500,000 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.






# சினிமா துளிகள்




## கெட்டவன்னு பேர் எடுத்த நல்லவன்டா படத்தில் வில்லனாக அறிமுகமாகிறார் நடிகர் ஆதவ் !

பிக் பாஸ் புகழ் மஹத், ஐஸ்வர்யா, முதன்மை பாத்திரத்தில் நடிக்கும் திரைப்படம் "கெட்டவன்னு பேர் எடுத்த நல்லவன்டா". இப்படத்தில் யோகி பாபு, மொட்ட ராஜேந்திரன் உள்ளிட்ட பல முன்னணி கலைஞர்கள் நடிக்கின்றனர். ரொமான்ஸ் காமெடி வகையில் உருவாகும் இத்திரைப்படத்தில் அறிமுக நடிகர் ஆதவ் எதிர்மறை நாயகனாக நடிக்கிறார்.

இப்படத்தின் கதை, எதிர்மறை நாயகன் பாத்திரத்திற்கு உடல் ரீதியாகவும், தோற்றத்திலும் ஒரு வலுவான எதிரியை கோரியதால், படக்குழு பொருத்தமான நடிகரை தேடி வந்தது. அந்த வகையில் ஆதவ் நன்கு கட்டமைக்கப்பட்ட உடல் தகுதியுடனும், கவர்ச்சிகரமான ஆளுமையுடனும், எதிர்மறை நாயகன் பாத்திரத்திற்கு மிகப் பொருத்தமானவராக அமைந்தார்.

பல திறமைகளைக் கொண்ட ஆதவ், நடிப்பு, மாடலிங், மேடை நாடக நடிப்பு, கால்பந்து, குத்துச்சண்டை, ஸ்டண்ட் என்று பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்குபவர். இரண்டு ஆண்கள் (கதாநாயகன் மஹத் மற்றும் ஆதவ்), ஒரே பெண் (ஐஸ்வர்யா தத்தா) மீது காதலில் விழுகிறார்கள்.

அதில் நாயகி ஆதவ் பாத்திரத்திற்கு நிச்சயிக்கப்பட்டிருக்க, ஆளுமை மிக்க அந்த எதிர் நாயகனை கடந்து, நாயகன் எவ்வாறு காதலியை கரம்பிடிக்கிறான் என்பதே கதை. பல முன்னணி கலைஞர்கள் பங்களிப்பில் காதல் காமெடி கலந்த அட்டகாசமான கமர்ஷியல் படமாக இப்படம் உருவாகி வருகிறது.



## வலிமை படத்தின் லேட்டஸ்ட் அப்டேட்

நடிகர் அஜித்தின் 60-வது படம் வலிமை. எச்.வினோத் இயக்கி உள்ள இப்படத்தில் அஜித்துக்கு ஜோடியாக பாலிவுட் நடிகை ஹூமா குரேஷி நடித்துள்ளார். மேலும் யோகிபாபு, 'குக் வித் கோமாளி' புகழ், தெலுங்கு நடிகர் கார்த்திகேயா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

போனி கபூர் தயாரித்துள்ள இப்படத்திற்கு நிரவ் ஷா ஒளிப்பதிவு செய்துள்ளார். யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார். இவரது இசையில் சமீபத்தில் நாங்க வேற மாதிரி என்ற பாடல் வெளியாகி வைரலானது.

இந்நிலையில் படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்புக்கு படக்குழு ரஷ்யா சென்றிருந்தது. அதில் அஜித் பங்கேற்கும் மிகப்பெரிய பைக் சண்டைக்காட்சிகள் படமாக்கப்பட்டன. தற்போது இந்த படப்பிடிப்பு நிறைவடைந்துவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. மேலும் வலிமை படக்குழு மாஸ்கோவில் இருந்து சென்னைக்கு திரும்பி விட்டதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளது.




## நடிகை கயல் ஆனந்தியின் நிஜ பெயரே இதுதானா, இந்த இயக்குனர் தான் பெயர் மாற்றினாரா?

தமிழில் 2014ம் ஆண்டு பொறியாளன் என்ற படம் மூலம் தமிழில் அறிமுகமானவர் நடிகை ஆனந்தி.

கயல் படத்தின் மூலம் மக்களுக்கு நன்கு பரீட்சயப்பட்ட நடிகையாக மாறினார். இப்படத்தில் இருந்து தான் அவருக்கு கயல் ஆனந்தி என்ற பெயரே கிடைத்தது.

இப்போது கமலி From நடுக்காவேரி என்ற படத்தில் நடித்து இருந்தார்.

இப்படத்திற்கான ஒரு பேட்டியில் கயல் ஆனந்தி நிறைய விஷயங்கள் குறித்து பேசியுள்ளார்.

அப்போது தன்னுடைய பெயர் ஆனந்தி இல்லை என்றும் தன்னுடைய உண்மையான பெயர் ரக்ஷிதா என்றும் பிரபுசாலமன் தன் பெயரை ஆனந்தி என்று மாற்றி விட்டதாகவும் கூறியுள்ளார்.



## விஜய் டிவியில் நடிகர் சிவகார்த்திகேயன் வாங்கிய சம்பளம் எவ்வளவு தெரியுமா

தமிழ் திரையுலகில் முன்னணி நடிகராக, வலம் வருபவர் நடிகர் சிவகார்த்திகேயன்.

இவர் நடிப்பில் உருவாகி இருக்கும் டாக்டர் திரைப்படம், விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், ரவிக்குமார் இயக்கத்தில் இவர் நடிப்பில் அயலான் மற்றும் சிபி சக்ரவத்தி இயக்கத்தில் டான் ஆகிய திரைப்படங்கள் உருவாகி வருகிறது.

இந்நிலையில் நடிகர் சிவகார்த்திகேயன் விஜய் டிவியில் இருந்தபோது, ரூ. 2000 ஆயிரம் தான் சம்பளமாக வாங்கி வந்துள்ளாராம்.

இன்று பல கோடிகளை சம்பளமாக வாங்கி வரும் நடிகர் சிவகார்த்திகேயன், அப்போது ரூ. 2000 மட்டுமே வாங்கி வந்துள்ளார் எனும் செய்தி, சமூக வலைதளத்தில் ரசிகர்களால் வைரலாகி வருகிறது.





# பல்சுவை கதம்பம்



## ரோஜாப்பூ நிறக் கன்னங்கள் பெறக் குறிப்புகள்

அனைத்து பெண்களுக்கும் அழகான ரோஜாப்பூ நிற கன்னங்கள் வேண்டும் என்ற ஆசை இருக்கும். இவ்வாறு ரோஜாப்பூ நிறக் கன்னங்கள் வேண்டுமெனில், உடல் நன்கு ஆரோக்கியமாக இருக்க வேண்டும். ஏனெனில் உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கு, ரோஜாப்பூ நிறக் கன்னங்களும் ஒரு அடையாளம். பொதுவாக ரோஜாப்பூ நிறக் கன்னங்களை மேக்-கப் மூலம் தான் பலர் பெறுவார்கள். அதிலும் சிலர் நன்கு வெளுப்பாக வெள்ளை நிற சருமத்தில் இருப்பார்கள். அவ்வாறு இருந்தால், அவர்களுக்கு உடலில் இரும்புச்சத்தானது குறைவாக உள்ளது என்று அர்த்தம். மேலும் அத்தகையவர்களைப் பார்த்தால், நோயாளிகள் போன்றும் இருக்கும். ஆனால் ஆரோக்கியமாகவும், எந்த ஒரு கெமிக்கல் கலந்த பொருட்களைப் பயன்படுத்தாமலும், இயற்கையாகவே, ரோஜாப்பூ நிறக் கன்னங்களைப் பெறுவதற்கு ஒருசிலவற்றை அவ்வப்போது செய்து வர வேண்டும். அவ்வாறு செய்து வந்தால், நல்ல அழகாக பொலிவோடு காணப்படுவதோடு, கன்னங்களும் அழகாக ரோஜாப்பூ நிறத்தில் காணப்படும்.

**வெதுவெதுப்பான நீரில் கழுவுவது**

முகத்தை கழுவும் போது, வெதுவெதுப்பான நீரைப் பயன்படுத்தி முகத்தைக் கழுவினால், முகத்தில் இரத்த ஓட்டமானது நன்கு சீராக இருந்து, கன்னங்களும் நன்கு அழகாக அழுக்கின்றி பொலிவோடும், புத்துணர்ச்சியுடனும் இருக்கும்.

**ஆப்பிள் சீடர் வினிகர்**

ஆப்பிள் சீடர் வினிகரைக் கொண்டு, தினமும் முகத்திற்கு சிறிது நேரம் மசாஜ் செய்து வந்தால், ஆப்பிள் போன்ற கன்னங்களைப் பெறலாம்.ஆவி பிடித்தல் முகத்திற்கு இரண்டு நாட்களுக்கு ஒரு முறை ஆவிப் பிடித்தால், முகத்தில் உள்ள கிருமிகள் மற்றும் இறந்த செல்கள் வெளியேறி, கன்னங்கள் நன்கு குண்டாகவும், அழகாகவும் காணப்படும்.

**ஒயின்**

தினமும் ஒரு டம்ளர் ஒயினை குடித்தால், உடலின் உள்ளே வெப்பமானது உருவாகி, கன்னங்கள் மட்டுமின்றி, உடலும் நன்கு ரோஸ் நிறத்தில் மாறும். வண்ணமயமான உணவுகள் நல்ல வண்ணமயமான உணவுகளான தக்காளி, சிவப்பு மற்றும் மஞ்சள் நிற குடைமிளகாய், பீச், தர்பூசணி போன்றவற்றை சாப்பிட வேண்டும். இதனால் அதில் உள்ள விட்டமின் சி மற்றும் ஈ, ரோஜாப்பூ நிற கன்னங்களைப் பெற வைக்கும். தண்ணீர் தண்ணீர் அதிகம் குடித்தாலே, உடல் ஆரோக்கியமாகவும், புத்துணர்ச்சியுடனும் இருக்கும். ஏனெனில் தண்ணீர் குடிப்பதால், உடலில் உள்ள டாக்ஸின்கள் வெளியேறி முகம் பொலிவோடு மின்னும்.

**தக்காளி**

தக்காளியின் சாற்றை முகத்திற்கு தடவி, சிறிது நேரம் ஊற வைத்து கழுவி வந்தால், தக்காளியின் நிறத்தைப் பெறலாம்.

**துவரம் பருப்பு**

துவரம் பருப்பை பாலில் 30 நிமிடம் ஊற வைத்து, பின் அதனை நன்கு கெட்டியாக அரைத்து, முகத்தில் தடவி, 20 நிமிடங்கள் ஊற வைத்து கழுவினால், முகம் பொலிவோடு மின்னும்.

**ரோஸ் மாஸ்க்**

ரோஜாப்பூக்களை பால் சேர்த்து அரைத்து, வாரத்திற்கு 3 முறை முகத்திற்கு மாஸ்க் போட்டு வந்தால், எளிதில் ரோஜாப்பூ நிறக் கன்னங்களைப் பெறலாம்.

## கைவிரல் மூட்டுக்களில் கருமையைப் போக்க

கைவிரல் மூட்டுக்கள் கருப்பாக இருப்பதற்கு, அளவுக்கு அதிகமாக சூரியக்கதிர்களின் தாக்கம், நிறமிகளின் தேக்கம் போன்றவை காரணங்களாகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள இயற்கை வழிகளைப் பின்பற்றினால், உங்கள் கைவிரல் மூட்டுக்களில் உள்ள கருமைகளை விரைவில் போக்கலாம்.

எலுமிச்சை மற்றும் சர்க்கரை ஸ்கரப் : - 2 டீஸ்பூன் தேனில்,1 டீஸ்பூன் எலுமிச்சை சாறு மற்றும் 1 டீஸ்பூன் சர்க்கரை

ஆகியவற்றை ஒன்றாக கலந்து, கைவிரல் மூட்டுக்களில் தடவி 15 நிமிடம் மசாஜ் செய்து, பின் கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால், கைவிரல் மூட்டுக்களில் உள்ள கருமை வேகமாக மறைய ஆரம்பிக்கும்.

சர்க்கரை மற்றும் ஆலிவ் ஆயில்:-3 டீஸ்பூன் ஆலிவ் ஆயிலுடன், 2 டீஸ்பூன் சர்க்கரை சேர்த்து கலந்து,

கைவிரல் மூட்டுக்களில் தடவி 5 நிமிடம் ஸ்கரப் செய்து, பின் 5 நிமிடம் கழித்து மீண்டும் ஸ்கரப் செய்து கழுவ வேண்டும். முக்கியமாக இச்செயலை செய்த பின், கைகளுக்கு லேசாக மாய்ஸ்சுரைசரைத் தடவுங்கள்.

ஆயில் மசாஜ் : - 1/2 டீஸ்பூன் ஜொஜோபா ஆயில்,1/2 டீஸ்பூன் பாதாம் எண்ணெய், 1/2 டீஸ்பூன் ரோஸ்மேரி ஆயில்,மற்றும் 2-3 துளி எலுமிச்சை சாறு

ஆகியவற்றை ஒன்றாக கலந்து, கை விரல் நகங்கள் மற்றும் கைவிரல் மூட்டுக்களில் தடவி மசாஜ் செய்ய வேண்டும். இப்படி தினமும் இக்கலவையைக் கொண்டு மசாஜ் செய்து வந்தால், கைகளில் உள்ள கருமை நீங்குவதோடு, நகங்களும் ஆரோக்கியமாக இருக்கும். குறிப்பாக இந்த செயலை தினமும் இரவில் படுக்கும் முன் செய்து வர நல்ல மாற்றம் தெரியும்.

மில்க் க்ரீம் மற்றும் மஞ்சள் : - 1 டீஸ்பூன் மில்க் க்ரீம், 1/2 டீஸ்பூன் மஞ்சள் தூள் மற்றும் 2-3 துளிகள் பாதாம் எண்ணெய்

ஆகியவற்றை ஒன்றாக கலந்து, கைவிரல் மூட்டுக்களில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து, பின் தேய்த்து கழுவ வேண்டும். இப்படி வாரத்திற்கு 2-3 முறை செய்து வந்தால், கைவிரல் மூட்டுக்களில் உள்ள கருமை மறைவதைக் காணலாம்.

## கூந்தல் வளர்ச்சிக்கு செம்பருத்தி

**செம்பருத்தி**

நாம் உண்ணும் தவறான உணவு பழக்கங்களாலும்,மாசு நிறைந்த சுற்றுப்புற சூழ்நிலைகளாலும், கூந்தல் உதிர்ந்து, வரண்டு போய்விடுகிறது.

கூந்தலுக்கு கலரிங் செய்வது மிகவும் தவறு. இருப்பினும் அனைவரும் இப்போது செய்து கொள்வது ஃபேஷனாகி போய்விட்டது.

இவற்றினால் கூந்தல் பலவீனப்படுவதோடு மட்டுமல்லாமல் பொடுகு தொல்லையும் வலுக்கிறது.

இவற்றிற்கெல்லாம் அருமையான தீர்வு செம்பருத்தி மாஸ்க். செம்பருத்தி மற்றும் செம்பருத்தி இலைகள் அற்புதமான கண்டிஷனர். தலைமுடியை பொடுகிலிருந்து காப்பாற்றுகிறது. செம்பருத்தியில் விட்டமின் ஏ, சி மற்றும் முடி வளர அடிப்படைதேவையான அமினோ ஆசிட் அதிகம் உள்ளது.

**செம்பருத்தி மாஸ்க் செய்வது எப்படி?**

செம்பருத்தியை தனியாக இல்லாமல் யோகார்ட் அல்லது வெந்தயத்துடன் சேர்த்து கலவையை தயாரிக்கவும். இது கூந்தலை இன்னும் அழகாக்கும், பலப்படுத்தும். முதலில் செம்பருத்தி- யோகார்ட் கலவை செய்யும் முறை - ஃப்ரஷான செம்பருத்தி மலர்கள் - 8-10, யோகார்ட் - 3-4, டேபிள் ஸ்பூன், தேன் - 1 டேபிள் ஸ்பூன் ரோஸ்மெரி எண்ணெய் - சில துளிகள் (விருப்பமிருந் தால்)

1. முதலில் செம்பருத்தியின் தண்டினையும், அடிபாகத்தில் உள்ள புற இதழ்களையும் அகற்றி விட வேண்டும்.

2. அவற்றுடன் யோகார்ட் கலந்து மிக்ஸியில் நைசாக பேஸ்ட் போன்று அரைக்கவேண்டும். தேவைக்கேற்ப நீர்விடவும்.

3. அதனை ஒரு கிண்ணத்தில் எடுத்துக் கொண்டு அதனுள் தேனை சேர்க்க வேண்டும்.

4. விருப்பமிருந்தால் ரோஸ்மெரியை அதனுடன் சேர்க்கலாம். ரோஸ்மெரி எண்ணெய் கூந்தல் வளர உதவிபுரிகிறது. இப்போது இந்த கலவையை தலை முடியின் வேர்கால்களிலிருந்து தடவ வேண்டும். முழுவதும் தேய்த்து அரைமணி நேரம் கழித்து அலசலாம்.

02ஆம் பக்க தொடர்ச்சி...

புத்திசாதூரியமாக செயற்பட்டால் மாத்திரமே இந்த இலங்கை தீவை கொடிய கொரோனா வைரஸிலிருந்து தக்கவைத்துக்கொள்வது மாத்திரமன்றி பொருளாதார ரீதியிலும் கட்டியெழுப்பமுடியும்.

## ஆதித்தியன்

06ஆம் பக்க தொடர்ச்சி

பெண்கள் நிர்வாகத்திற்கு தகுதியற்றவர்கள் அவர்களை அல்லா ஒரு பாலியல் பொருளாகவே பார்த்து வந்தார் அது போன்று நாமும் அப்படியே செய்து வருகின்றோம். சொர்க்கத்தில் 72 கன்னி களுடன் இறந்தபின் வாழலாம் என்ற மடமை உபதேசங்களையும் இந்த முஸ்லிம் மௌலவிகள் மதரிசாக்களில் கூறி வருகின்றனர். இதுவொரு தவறான கருத்தாகும். அல்லாவினுடைய கட்டளைகள் என்ற பொழுது நாம் மேல் குறிப்பிடப்பட்டதை போன்று ஆப்கானிஸ் தானில் தலிபான் முஸ்லிம் தீவிரவாதிகள் பிறப்பித்துள்ள கட்டளைகளை பார்க்கு மிடத்து இதனை சாமானிய மனிதர்கள் கூட ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் ஆனாலும் ஆயுத முனையில் அதனை ஏற்றுக் கொள்ளவேண்டிய நிலைப்பாடு இஸ்லாமி யர்களுடைய நிலைப்பாடு என்ன வென்றால் பெண்களை அடிமைப்படுத்துவது அனைத்து மக்களும் அல்லாவை ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லாவை ஏற்றுக்கொள்ளா தவர்கள் அனைவரும் காபியர்கள் அல்லது பிறஜாதிகள். அல்லாவை பற்றி அவர்களு க்கு உபதேசம் பன்னவேண்டும் அதனை அவர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவர் களின் கழுத்து வெட்டப்பட வேண்டும் என்பது சஹ்ரானினுடைய இருவெட்டிலி ருந்து நாம் அறிந்துகொள்ள முடிகின்றது.

ஆகவே தலிபான்களை ஆதரிக்கும் நிலைமை தோற்றுவிக்கப்படுமாக இருந்தால் இலங்கை அரசாங்கம் பொல்லை கொடுத்து அடிவாங்கும் ஒரு நிலைமை உருவாக்கப்படும். இச் செயற்பாடானது மற்றுமொரு அரசை நிறுவுவதற்கான வழிவகைகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும். அந்த நிலைமை மிக விரைவில் ஏற்படுத்தப்பட்டாலும் அதில் ஆச்சரியப்படுவ தற்கு ஒன்றும் இல்லை.

# கடி ஜோக்ஸ்

நண்பர் 1 : என்ன சார் ஸ்கூல் பாக்கவே வினோதமா இருக்கு.

நண்பர் 2 : இது ஸ்கூல் இல்ல மைதூர்பாகு சரியா வரல்ல. அதனால வீணா போக வேண்டாமேன்னு ஸ்டுலா பண்ணிட்டா யாராவது வந்தா உக்கார வச்சுக்கலாம் பாருங்க.

நண்பர் 1 : என் – பையனுக்கு ராஜா-ன்னு பெயர் வெச்சது தப்பாப் போச்சு

நண்பர் 2 : ஏன் என்ன ஆச்சு ?

நண்பர் 1 : எப்பவும் (உடம்பில்) படையுடன் இருக்கான்

நீதிபதி : பத்தாயிரம் ஒரு மாத ஜெயில் தண்டனை இதுல எது வேனும் உனக்கு.

குற்றவாளி : ஹி.ஹி...பத்தாயிரமே போதும் சாமி எப்டியாச்சும் பொட்டிக்கடை வச்சாச்சியும் பொழச்சிக்குவேன்.

# வாழ்க்கை தத்துவங்கள்

1. சிறந்தவனாக இரு, சிறந்ததைவைத்திரு, சிறந்ததை செய்.

2. ஓடாத நதியும், தேடாத மனமும் தெளிவுகொள்ளாது.

3. போகும்போதே என்னை ரசித்துகொண்டே போ, திரும்பி வரமாட்டேன்உனக்காக. இப்படிக்கு – வாழ்க்கை.

4. வாழ்க்கை தரும் பாடம்

எதுவும் சில காலம்தான்.

எதிர்ப்பார்ப்பை குறைத்துகொண்டால் ஏமாற்றம்ஒன்றும் பெரிதாகஇருக்காது.

நம்பு, யாரையும் முழுமையாகநம்பாதே. உன்னை மட்டும் வாழ்வில் நம்பு.

சிந்தனை செய், கோபப்படாதே.

வாழ்வது ஒரே ஒரு வாழ்க்கை. அதை அர்த்தமுள்ளதாக வாழ்ந்துவிட்டு போ.

5. வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல, நீ மற்றவர்கள் மனதில் வாழும்வரை.

6. அனுபவத்தால் உணரவேண்டிய ஒன்றைஆயிரம் தத்துவ ஞானிகளாலும்உணரவைக்க முடியாது.

7. உன் மனம் ஒன்றே உன்னைவீழ்த்தக்கூடிய ஒரே ஆயுதம். அதுதெளிவாக இருக்கும் வரையில் நீஒருவராலும் வீழ்த்தப்படுவதில்லை.

8. உனக்கு நீ நல்லவனாய் இருந்தால்போதும், மற்றவருக்கு நீ கெட்டவனாய்தெரிந்தால் அது உன் குற்றம் இல்லை. கண்ணில் பிழை என்றால் பிம்பமும்பிழையே. அது பார்க்கப்படுபவன்பிழையல்ல, பார்ப்பவன் பிழை.

9. யாரை நீ வெறுத்தாலும் உன்னைமட்டுமாவது நேசிக்க கற்றுக்கொள். ஏனெனில் இந்த உலகிலேயே மிக மிகசிறந்த காதல் உன்னை நீநேசிப்பதுதான்.

10. இன்பத்திலும் துன்பத்திலும் மனம்விட்டுபேச துணை இல்லாதபோது தான்தெரியும், உண்மையான் அன்பின்பெருமை.

11. மௌனத்தில் வார்த்தைகளையும், கோபத்தில் அன்பையும்உணர்ந்துகொள்வது தான் உறவு புரிதல்இருந்தால் பிரிதல் இல்லை.

1ங்கள் புன்னகையில் உள்ளசோகத்தையும், கோபத்தில் உள்ளகாதலையும், மௌனத்தில் உள்ளகாரணத்தையும் யார் புரிந்து கொள்கிறார்களோ அவர்களேஉங்கள் அன்புக்கு உரிமை உடையவர்.

13. உரிமை இல்லாத உறவும், உண்மைஇல்லாத அன்பும், நேர்மை இல்லாதநட்பும், நம்பிக்கை இல்லாதவாழ்க்கையும் என்றும் நிரந்தரமில்லை.

14. இழக்கும் வரை ஒருவரின் அருமைநமக்குப் புரிவதில்லை.

15. ஒருவரின் அருமையை அவர்களைபிரியும் தருணத்தில் மட்டுமே உணரமுடியும், நினைவுகளின் துணையோடு.

16. ஒருவரை இழக்கும் போது வரும்கண்ணீரைவிட, அவர்களைஇழக்கக்கூடாது என்றுநினைக்கும்போது வரும் கண்ணீருக்குஇன்னும் வலி அதிகம்.

17. எதுவுமே உயர்ந்தது இரண்டு முறை, கிடைப்பதற்கு முன்பு தவறவிட்ட பின்பு.

18. தனிமை கொஞ்சம் வித்தியாசமானது. நாமே அதை எடுத்துக்கொண்டால் அதுஇனிக்கும், மற்றவர்கள் நமக்கு அதைகொடுத்தால் கசக்கும்.

19. எல்லோருடைய இதயத்திலும் காயங்கள்உண்டு. அதை வெளிப்படுத்தும்விதம்தான் வித்தியாசம். சிலர்கண்ணீராக, சிலர் புன்னகையாக.

20. ஒவ்வொரு இதயத்திலும் ஏதாவது ஒரு வலி இருந்துகொண்டுதான் இருக்கிறது. அதை முட்டாள்கள் கண்களிலும், அறிவாளிகள் புன்னகையிலும் மறைத்துக் கொள்கிறார்கள்.

21. உங்கள் எண்ணங்கள் எப்படியோஅப்படித்தான் வாழ்க்கையும் அமையும். எனவே சிறந்ததையே எண்ணுங்கள்.

22. அதிகம் பேசாதவனை உலகம் அதிகம்விரும்புகிறது, அளந்து பேசுபவனைஅதிகம் மதிக்கிறது, அதிகம்செயல்படுபவனையே கைகூப்பித்தொழுகிறது.

23. உங்கள் எண்ணம் பண்பட்டு இருந்தால்உங்களுக்கு கெட்ட எண்ணங்களேதோன்றாது. இதனால் உங்கள்சொல்லும், செயலும் தன்னாலேயேபண்பட்டுவிடும். இதனால் உங்கள்எண்ணங்களின் மேல் அதிக கவனம்செலுத்தவேண்டியதுஇன்றியமையாதது.

24. நமது சொல் அல்லது செயலுக்குமூலகாரணியாக இருப்பது நம்எண்ணமே. நாம் எதையும் சொல்லும்முன்போ அல்லது எதையும் செய்யும்முன்போ அதற்கான உந்துதல் முதலில்நம் எண்ணத்தில்தான் உருவாகிறது.

25. உருவத்தில் எப்படி இருந்தாலும்உள்ளத்தில் குழந்தையாய் இரு, இந்தஉலகமே உன்னை நேசிக்கும்.

26. எல்லாக் காயங்களுக்கும் ஒரு மருந்து, குழந்தைகளின் புன்னகை என்னும்அருமருந்து.

27. எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டுமருந்துகள் உள்ளன. ஒன்று காலம், இன்னொன்று மௌனம்.

28. நீ சிரித்து பார் உன் முகம் உனக்குபிடிக்கும், மற்றவர்களை சிரிக்க வைத்து பார் உன்முகம் எல்லோருக்கும் பிடிக்கும்.

29. நட்பையும் மகிழ்ச்சியையும்இரட்டிப்பாக்க அருகிலிருப்பவர்களுக்குகொடுத்துவிடுங்கள்.

30. தவறு செய்வது மனித இயல்பு.

# கொரோனாவின் புதிய திரிபுகளால் ஆபத்தில் உலக நாடுகள்



சீனாவின் வூஹான் மாகாணத்தில் கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் உலக நாடுகளுக்குப் பரவியுள்ள கொவிட் வைரசினால் இன்று உலகிலுள்ள வல்லரசு நாடுகள் கூட தடுமாறும் நிலை தோன்றியுள்ளது. பரவலாக உலகிலுள்ள அனைத்து நாடுகளும் இந்த கொவிட் வைரசின் தாக்கத்தை எதிர்கொண்டுள்ளன.

இத் தாக்கத்தினால் உலக நாடுகளின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. நாடுகளுக்கிடையிலான போக்குவரத்துக்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டு சில நாடுகளில் மாத்திரம் இடம்பெற்று வருகின்றது. அதுவும் உலகில் பல நாடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆசிய நாடுகள் பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்க ஆரம்பித்துள்ளன. ஒரு சில உலக நாடுகள் ஆரம்பத்திலே கட்டுப்பாடுகளை தத்தமது நாடுகளில் விதித்தமையாலும், சரிவரக் கடைப்பிடித்தமையாலும் ஓரளவான தாக்கங்களையே எதிர்கொண்டுள்ளன.

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள், இவ் வைரஸ் தொற்றினால் நிலைகுலைந்துபோயுள்ளன. செய்வதறியாது, நாட்டு மக்களை பாதுகாப்பதில் சிரமங்களை எதிர்நோக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது. எதிர்வரும் காலங்களில் 05ம் அலையின் தாக்கத்தினை இலங்கையில் உணரக்கூடியதாகவிருக்கும் என நிபுணர்களால் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. நாட்டில் கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 10000 இனைக் கடந்துள்ளது.

இலங்கையில் நாளாந்த கொவிட் மரணங்களின் எண்ணிக்கை 200ஐ கடந்துள்ளதாலும், கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாகவே நேற்றைய தினம் (03.09.2021) கொவிட் தடுப்பு செயலணி கூடிய வேளையில், எதிர்வரும் 13 ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை தனிமைப்படுத்தல் ஊரடங்கு மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை, 64,647 ஆக உயர்வடைந்துள்ளதாக காவல் துறை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஒரு வாரத்திற்கும் மேலாக இந்தியாவின் உத்திரபிரதேசத்தின் சில மாவட்டங்களில் மர்ம நோய் தொற்றினால் பாதிக்கப்பட்ட நூறுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும், இதுவரை இந்த புதிய நோய் தொற்று காரணமாக 50 பேர் வரையில் உயிரிழந்ததுடன், அவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காய்ச்சல், தலைவலி, மூட்டு வலி உள்ளிட்ட நோய் அறிகுறிகளுடன் சிறுவர்கள் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனையில், அவர்களுக்கு கொவிட்-19 தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ள குறித்த நோய் தொற்று தொடர்பில் மருத்துவர்கள் தொடர்ந்தும் ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், இது ஒருவகை நுளம்பினால் ஏற்பட்டதா என்பது குறித்து மருத்துவ நிபுணர்கள் சந்தேகித்துள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.

அதேநேரம் கொவிட் வைரசானது இன்று பல்வேறு திரிபுகளாக உருமாற்றம் பெற்றுள்ளதுடன் மிகத் தீவிரமாக மக்களைத் தாக்கத் தொடங்கியுள்ளதுடன், மரணங்களையும் விரைவாக ஏற்படுத்த ஆரம்பித்துள்ளது. தற்போது இலங்கையானது கொரோனாவின் திரிபான டெல்டா வகை வைரசினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதனாலேயே இலங்கையில் தற்போது மரணங்களின் எண்ணிக்கையும் நாளாந்த தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகமாகவிருப்பதாக வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிகவீரியம்கொண்ட C.1.2 என்ற கொவிட் திரிபு ஆறு நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது. தென் ஆபிரிக்காவில் வழமைக்கு மாறாக அதிக பிறழ்வுடன் வீரியம் கொண்ட கொரோனா வைரஸ் திரிபு கண்டறியப்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்க விஞ்ஞானிகளால் இது கண்டறியப்பட்டுள்ளதாக அமெரிக்காவின் தேசிய தொற்று நோய் நிறுவகம் தெரிவித்துள்ளது. இந்த வைரஸ் திரிபு கொங்கோ, மொரீஷியஸ், போர்த்துக்கல், நியூஸிலாந்து மற்றும் சுவிட்ஸர்லாந்து முதலான நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புதிய உருமாறிய 'மு' வைரசானது, தடுப்பூசிக்கு தப்பிவிடும் அறிகுறிகளை கொண்டிருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இதையடுத்து, இலங்கையிலும் 'மு' பரவாமல் தடுக்கும் நடவடிக்கையை அரசு துரிதமாக மேற்கொள்ளவேண்டும். கொலம்பியா நாட்டில் பி.1.621 என்ற புதிய உருமாறிய கொரோனா முதல் முதலில் கண்டறியப்பட்டது. அதற்கு உலக சுகாதார நிறுவனம் 'மு' என்று பெயர் சூட்டியுள்ளது.

இலங்கையின் மொத்த சனத்தொகை அடிப்படையில் உலகில் அதிகளவில் கொவிட் தடுப்பூசி செலுத்தியுள்ள நாடுகள் தொடர்பான கடந்த வாரத்துக்கான தரப்படுத்தலில் இலங்கை முதலிடத்தை பிடித்துள்ளது. **Our World** இணையத்தளத்தினால் வெளியிடப்பட்டுள்ள கடந்த வாரத்துக்கான தரவுகளின்படி, இது 13 சதவீதமாக காணப்படுகிறது.

ஏற்கனவே பொருளாதார வீழ்ச்சியில் இருந்த இலங்கை போன்ற நாடுகள் கொரோனா வைரசின் தாக்கம் காரணமாக முற்றாக செயலிழந்துபோகும் நிலைக்கு வந்துள்ளன. இலங்கை சீனாவிடமிருந்து இச் சூழலில் கடனையும் பெற்றிருக்கிறது. சுற்றுலாத்துறையும், ஆடைகளின் உற்பத்தியும் தான் தற்போதைய நிலையில் இலங்கைக்கு வருமானம் ஈட்டும் துறைகளாகும். சுற்றுலாப் பயணிகளின் வருகை இல்லாமல் போயுள்ளது. ஆடைத் தொழிற்சாலைகளும் பெரும் நெருக்கடிக்கு மத்தியில் இயக்கப்பட்டு வருகின்றன. நாளாந்தம் தொற்றுக்குள்ளாவோர் ஆடைத் தொழிற்சாலையினர் என்கிற நிலைமையும் இருக்கிறது. ஆடைத் தொழிற்சாலைகளில் கொவிட் கொத்தணிகளும் கண்டுபிடிக்கப்பட்டது.

இலங்கையில் டெல்டா வைரஸ் பரவல் மிக மோசமான நிலையை எட்டியுள்ள நிலையில் இலங்கை தொடர்ந்தும் கொவிட் பரவல்பட்டியலில்சிவப்புவலயமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை வைத்தியர்கள் சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார். இலங்கை இன்னமும் கோவிட் -19 வைரஸ் அச்சுறுத்தல் நாடுகளின் பட்டியலில் பிரதான இடத்தில் உள்ளது. நாட்டில் சகல பகுதிகளிலும் கொவிட் வைரஸ் பரவல் காணப்படுகின்றது என சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை தற்போது நான்காம் எச்சரிக்கை நிலையை அடைந்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்தியக் குழு உறுப்பினரும், ஊடகக்குழு உறுப்பினருமான வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்று க்கு வழங்கியுள்ள பிரத்தியேக செவ்வியில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். நாட்டில் தற்போது காணப்படும் கொவிட் அச்சுறுத்தல் நிலைமையானது தொடர்ந்து நீடித்தால் எதிர்வரும் நாட்களில் நாள் ஒன்றுக்கு 10000 பேர் தொற்றாளர்களாக இனங் காணப்படும் அபாயம் உள்ளது. அத்துடன் மாதமொன்றுக்கு 10000 பேர் உயிரிழக்கும் அவலநிலையும் ஏற்படும்.

நாட்டில் தற்போது பதிவாகும் கொவிட் மரண வீதமானது இந்தியாவை விட ஐந்து வீதத்தால் அதிகரித்துள்ளது. பெயரளவில் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்த தனிமைப்படுத்தல் ஊரடங்கில் 90 சதவீதமான மக்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கி இருந்தால் மாத்திரமே கொவிட் தொற்றை கட்டுப்படுத்த முடியும். நாடு தற்போது எச்சரிக்கை நிலை நான்கில் உள்ளது. இது சிவப்பு எச்சரிக்கையையும் சமூக பரவலையும் குறிக்கின்றது என சுட்டிக் காட்டியுள்ளார். இதேவேளை தென்னாபிரிக்காவில் பரவும் சி12 எனப்படும் புதிய கொவிட் திரிபும் இலங்கையில் பரவும் அபாயம் உள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் அரசினால் மிக வேகமாக தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டு வருகின்றன. 18-30 வயதிற்குட்பட்டவர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், பாடசாலை மாணவர்களுக்கும் தடுப்பூசியினை மிக விரைவில் செலுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கும் இலங்கை வாழ் மக்கள், சுயதனிமைப்படுத்தலுடன் சுகாதார வழிமுறைகளை தீவரமாகப் பின்பற்றுவது மிக அவசியம். நாளொன்றுக்கான மரணங்களை வைத்து இலங்கையில் கொவிட் தொற்று பரவலின் தீவிரத்தை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

சுபன்



# அறிவியல் உலகம்



## சர்வதேச விண்வெளி நிலையத்தில் சரி செய்ய முடியாத கோளாறு ஏற்படும் நிலை: ரஷ்யா எச்சரிக்கை

காலாவதியான கருவிகள், வன்பொருள்கள் காரணமாக சர்வதேச விண்வெளி நிலையத்தில் சரி செய்ய முடியாத கோளாறுகள் ஏற்படலாம் என்று ஒரு ரஷ்ய அதிகாரி எச்சரித்துள்ளார்.

சர்வதேச விண்வெளி நிலையத்தின் ரஷ்யப் பகுதியில் உள்ள கருவி அமைப்புகளில் 80 சதவீதம் காலாவதியானவை என அரசு ஊடகத்திடம் தெரிவித்துள்ளார் விளாதிமிர் சோலோவ்யோவ் என்ற அந்த அதிகாரி.

இது தவிர, சிறிய விரிசல்கள் தென்படுவதாகவும் அது காலப்போக்கில் பெரிதாகலாம் என்றும் அவர் கூறுகிறார்.

வன்பொருள்கள் குறித்து ரஷ்யா முன்பே கவலை தெரிவித்து வந்திருக்கிறது. 2025க்குப் பிறகு சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து வெளியேறிவிடப் போவதாகவும் அது தெரிவித்துள்ளது.

ரஷ்யா, அமெரிக்கா, கனடா, ஜப்பான் மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் இணைந்து கூட்டாக இந்த விண்வெளி நிலையத்தை 1998ல் கட்டமைத்தன. தொடக்கத்தில் 15 ஆண்டுகள் செயல்படுவதற்காகவே இது வடிவமைக்கப்பட்டது.

இந்த நிலையத்தின் கருவி அமைப்புகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்ட அடுத்த நாளே சரி செய்யமுடியாத கோளாறுகள் தோன்றும் என்று சோலோவ்யோவ் கூறியுள்ளார்.

விண்வெளி நிலையத்தின் ரஷ்யப் பகுதியை கட்டமைக்கும் முன்னணி நிறுவனமான எனர்ஜியா- வின் முதன்மைப் பொறியாளர் அவர். அது தவிர அவர் ஒரு முன்னாள் விண்வெளி வீரரும்கூட.

நிலையத்தின் ரஷ்யப் பகுதியில் உள்ள கருவிகள் பழையதாகத் தொடங்குவதாகவும் விரைவில் அவற்றை மாற்றுவதற்கான தேவை வரும் என்றும் அவர் கடந்த ஆண்டு எச்சரித்தார்.

**விரிசல்கள் அதிகமாகும்**




விண்வெளி நிலையத்தில் இடம் பெற்றுள்ள 'ஜர்யா கார்கோ மாட்யூல்' என்ற ரஷ்ய அலகில் ஏற்பட்டுள்ள விரிசல்கள் காலப்போக்கில் அதிகமாகும் என்று சோலோவ்யோவ் ஆர்.ஐ.ஏ. செய்தி முகமையிடம் தெரிவித்துள்ளார். 1998ல் ஏவப்பட்ட இந்த அலகு விண்வெளி நிலையத்தில் உள்ள பழமையான அலகுகளில் ஒன்று. பெரிதும் இது சரக்குகளை இருப்புவைக்கவே பயன்படுத்தப்படுகிறது.

சர்வதேச விண்வெளி நிலையம்.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் பழையதாகிக்கொண்டிருக்கும் உலோகங்கள் சரி செய்ய முடியாத விளைவுகளை ஏற்படுத்தும். பேரழிவு ஏற்படும். அப்படி ஏற்பட நாம் அனுமதிக்கக் கூடாது என்று ரஷ்யாவின் துணைப் பிரதமர் யூரி போரிசோவ் கடந்த ஏப்ரல் மாதம் அரசுத் தொலைக்காட்சியிடம் கூறினார்.

கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள தொய்வுகள் காரணமாக 2030ம் ஆண்டுக்குப் பிறகு சர்வதேச விண்வெளி நிலையம் செயல்படமுடியாது என்று ராஸ்காஸ்மோஸ் என்ற ரஷ்ய விண்வெளி நிறுவனம் கூறியுள்ளது.

தொடர்ந்து நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டது, ஊழல் குற்றச்சாட்டுகள் போன்றவற்றால் ரஷ்யாவின் விண்வெளித் திட்டங்கள் கடந்த சில ஆண்டுகளில் பாதிக்கப்பட்டன. சர்வதேச விண்வெளி நிலையத்தின் ரஷ்யப் பகுதியும் தொடர் பிரச்சனைகளை எதிர்கொண்டன.



## நியூசிலாந்தில் கொரோனா தடுப்பூசி போட்ட பெண் இதய பாதிப்பால் மரணம் - அறிகுறியை எப்படி அறிவது? என்ன செய்ய வேண்டும்?

நியூசிலாந்தில் ஃபைசர் நிறுவனத்தின் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்ட பெண் உயிரிழந்தார். இது தடுப்பூசியுடன் தொடர்புடைய மரணம் எனக் கருதப்படுகிறது. தடுப்பூசியால் இதயத் தசையில் வீக்கம் ஏற்பட்டு அவர் உயிரிழந்திருக்கலாம் என்று தடுப்பூசி கண்காணிப்பு அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது. ஏற்கெனவே இருந்த உடல் பிரச்னைகளும் தடுப்பூசி போடப்பட்டதால் தூண்டப்பட்டிருக்கலாம் என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

தடுப்பூசியால் இதயத் தசையில் வீக்கம் ஏற்படுவது மிகவும் அரிதானது என்று ஐரோப்பிய தடுப்பூசி ஒழுங்கமைப்புகள் கூறுகின்றன. தடுப்பூசியால் ஏற்படும் பலன்களைப் பார்க்கும்போது அதனால் ஏற்படும் அபாயம் ஒன்றுமில்லை என்றும் அவை கூறுகின்றன. ஃபைசர், மாடனா ஆகிய இரு நிறுவனங்களின் தடுப்பூசிகளால் மிக அரிதான மையோகார்டிட்டிஸ் என்ற பக்க விளைவு ஏற்படுவதாக ஐரோப்பிய மருந்துகள் முகமை கூறுகிறது. இவை இளம் வயது ஆண்கள் மத்தியில் அதிகமாக இருப்பதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. தடுப்பூசியால்தான் மரணம் நேர்ந்தது என்பதை அரசு இன்னும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வில்லை.ஆனால், "மையோகார்டிட்டிஸ்" எனப்படும் இதயச் தசை வீக்கமானது பெரும்பாலும் தடுப்பூசியால் ஏற்பட்டிருக்கவே வாய்ப்பிருக்கிறது என்று தடுப்பூசி கண்காணிப்பு அமைப்பு கூறியுள்ளது.

"நியூசிலாந்தில் கோவிட் தடுப்பூசியின் பக்கவிளைவால் உயிரிழப்பு ஏற்படுவது இதுவே முதல் முறையாகும். தடுப்பூசியின் பாதகமான எதிர்வினைகளைக் கண்காணிக்கும் அமைப்பு தடுப்பூசி போட்டப்பட்ட பிறகு இறந்த மற்றவர்களின் அறிக்கையையும் ஆய்வு செய்திருக்கிறது. ஆனால் அவை எதுவும் தடுப்பூசியால் ஏற்பட்ட மரணங்கள் அல்ல." என்று அந்த அமைப்பு தனது அறிக்கையில் கூறியுள்ளது.

பெண்ணின் மரணம் குறித்து மேலும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. அது முடிந்ததும் இறுதி முடிவுகள் வெளியிடப்படும். இதுவரை பெண்ணின் பெயர், வயது உள்ளிட்ட வேறு எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை. பெண்ணின் மரணம் குறித்து மேலும் விசாரணை நடத்தப்பட்டு, மரண விசாரணை அதிகாரி இந்த வழக்கில் தீர்ப்பளிக்க உள்ளார். பெண்ணின் வயது உட்பட மேலதிக விவரங்களை அதிகாரிகள் வெளியிடவில்லை. கொரோனா தடுப்பூசியால் உயிரிழப்பு ஏற்படுவது மிகவும் அரிதானது என்று நிபுணர்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கூறுகிறார்கள். கொரோனாவால் பாதிக்கப்பட்டு மக்கள் அதிக எண்ணிக்கையி ல் உயிரிழப்பதைத் தடுக்க உதவுதால், அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் என ஐரோப்பிய மருந்துகள் முகமை கேட்டுக் கொண்டிருக்கிறது. உதாரணத்துக்கு பிரிட்டனில் ஃபைசர் தடுப்பூசி போட்டுக் கொண்ட 195 பேருக்கு மையோக ார்டிட்டிஸ் பாதிப்பு ஏற்பட்டது கண்டறியப்பட்டது. ஒட்டுமொத்தமாக 10 லட்சத்தில் 5 பேருக்கு இந்தப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.அவற்றில் பெரும்பாலானோருக்கு மிக லேசான அறிகுறிகள் மட்டுமே இருந்தன.

**மையோகார்டிட்டிஸ் என்பது என்ன?**

"மையோகார்டிட்டிஸ் என்பது இதயத் தசைகளில் ஏற்படும் வீக்கத்தைக் குறிப்பிடுகிறோம். இதற்குப் பலவகையான காரணங்கள் இருக்கலாம். பொதுவான காரணம் தொற்றுதான். வைரஸ், பாக்டீரியா, பூஞ்சை போன்ற தொற்றுகள் காரணமாக இதயத்தில் வீக்கம் ஏற்படலாம். உடலின் நோய் எதிர்ப்பு அமைப்பானது தசைகளில் பாதிப்பை ஏற்படுத்தும்போது இது உருவாகலாம்" என்கிறார் இதய சிகிச்சை நிபுணர் ஆர்.மோகன். "இதயம் செயலிழப்பதற்கான அறிகுறிகள் அனைத்தும் இதற்கு உண்டு. இதன் பொதுவான அறிகுறி மூச்சுத் திணறல். இவை தவிர நெஞ்சு வலி, படபடப்பு, அசாதாரணமான அளவிலான இதயத்துடிப்பு, கால்வீக்கம் ஆகியவை மையோகார்டிட்டிஸ் பாதிப்பின் அறிகுறிகள். சிலருக்கு காய்ச்சல் ஏற்படும்" என்கிறார் ஆர்.மோகன். "தடுப்பூசிகள் வைரஸுடனும், நோய் எதிர்ப்புத் திறனுடனும் தொடர்புடையவை. அவை நோய் எதிர்ப்புத் திறனை அதிகரிக்கும்போது இதயத் தசை வீக்கம் வர வாய்ப்பிருக்கிறது" என்கிறார் அவர். அறிகுறிகள் ஏற்பட்டவுடன் அலட்சியம் காட்டாமல் உடனடியாக மருத்துவரை நாடி சிகிச்சை எடுத்துக் கொள்வது மட்டுமே ஒரே வழி என்று அவர் வலியுறுத்துகிறார்.

**கொரோனாவுக்கும் இதய வீக்கத்துக்கும் என்ன தொடர்பு?**

இதய வீக்கம் என்பது வைரஸ் தொற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது என்பதால் கொரோனா காலத்தில் கணிசமான எண்ணிக்கையில் இந்தப் பாதிப்பு ஏற்பட்டதாகக் கூறுகிறார் இதய சிகிச்சை நிபுணர் பாபு. "கொரோனா வைரஸால் பெரும்பாலும் நுரையீரல் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது. அதைத் தாண்டி பலருக்கு இதயத்திலும் தொற்று ஏற்பட்டு இதயத் தசை வீக்கம் ஏற்பட்டிருக்கிறது. இது தொடர்பான ஆய்வில் அறிகுறியே இல்லாமல் கொரோனா வந்து போன பலருக்கும்கூட இதயத் தசை வீக்கம் வந்து குணமாகியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது" என்கிறார் பாபு. "எல்லா வயதினருக்கும் இந்தப் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது" என்கிறார் அவர். இறப்பு பதிவு செய்யப்பட்டிருந்தாலும், ஃபைசர் தடுப்பூசி போடுவதை நிறுத்தப் போவதில்லை என்று நியூசிலாந்து அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் புள்ளிவிவரங்களின்படி நியூசிலாந்தில் இதுவரை 3,465 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கும் அவர்களில் 26 பேர் உயிரிழந்தனர்.தொடக்கத்தில் கொரோனாவை முற்றிலுமாக ஒழித்த நாடு என்ற வகையில் நியூசிலாந்து வெகுவாகப் பாராட்டப்பட்டது. அதன் பிறகு தடுப்பூசி விநியோகத்தில் மெதுவாகச் செயல்பட்டது. சமீபத்திய நாள்களில் தடுப்பூசி விநியோகம் வேகம் பிடித்திருக்கிறது. நியூசிலாந்தில் 30 லட்சத்துக்கும் அதிமான தடுப்பூசிகள் போடப்பட்டிருக்கின்றன. 23 சதவிகிதம் பேர் இதுவரை தடுப்பூசி போட்டுக் கொண்டிருக்கின்றனர். கொரோனாவின் டெல்டா திரிபு காரணமாக நியூசிலாந்தில் தொற்று அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது. அதனால் பெரும்பாலான பகுதிகளில் பொதுமுடக்கம் அமலில் இருக்கிறது. நாட்டின் மக்கள் தொகை சுமார் 5 லட்சம் பேர். 560 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சையில் இருக்கின்றனர். நாட்டின் மிகப்பெரிய நகரமான ஆக்லாந்தைத் தவிர நாட்டின் பிற பகுதிகளில் செவ்வாய்க்கிழமை முதல் பொதுமுடக்கக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றன.

# விளையாட்டு செய்திகள்

## பராலிம்பிக் போட்டிகளில் இலங்கை வீரர் உலக சாதனை




இலங்கையின் தினேஷ் பிரியந்த ஹேரத், பராலிம்பிக் விளையாட்டு விழாவில் F46 ஈட்டி எறிதலின் ஆடவர் பிரிவில் முதல் தங்கப்ப தக்கத்தை சுவீகரித்துள்ளார்.

2020 பராலிம்பிக் விளையாட்டு விழாவில் தினேஷ் பிரியந்த ஹேரத் F46 ஈட்டி எறிதலின் ஆடவர் பிரிவில் புதிய உலக சாதனையை நிலை நாட்டியுள்ளார்

67.79 மீட்டர் தூரத்துக்கு அவர் திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.

## 111 கோல்கள்: கிறிஸ்டியானோ ரொனால்டோ உலக சாதனை



ஆடவருக்கான சர்வதேச கால்பந்தாட்ட போட்டிகளில் அதிக கோல்களைப் போட்ட வீரர் என்ற உலக சாதனையை போர்த்துக்கல்லின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ படைத்துள்ளார்.

உலகக்கிண்ண தொடருக்கான தகுதிகாண் சுற்றில், அயர்லாந்து குடியரசுக்கு எதிரான போட்டியில் 2 கோல்களை போட்டதன் மூலம் அவர் இந்த சாதனையை படைத்துள்ளார்.

இதன் மூலம் சர்வதேச கால்பந்தாட்ட போட்டிகளில் 111 கோல்களை கிறிஸ்டியானோ ரொனால்டோ போட்டுள்ளார்.

1993 முதல் 2006 வரை ஈரான் அணியில் விளையாடிய அலி டாய் (Ali Daei) 109 கோல்களை போட்டதே இதுவரை உலக சாதனையாகவிருந்தது. 2020 யூரோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் பிரான்ஸிற்கு எதிரான போட்டியில் இரண்டு கோல்களை போட்டு இந்த சாதனையை கிறிஸ்டியானோ ரொனால்டோ சமப்படுத்தியிருந்தார்.

90 அல்லது அதற்கு மேற்பட்ட சர்வதேச கோல்களை போட்ட வீரர்களாக அலி டாயும், கிறிஸ்டியானோ ரொனால்டோவும் மாத்திரமே பதிவாகியுள்ளனர்.

## டெல்லி கெப்பிட்டல்ஸ் அணியின் தலைவராக செயற்படவுள்ள ரிஷாப் பாண்ட்

நடைபெறவுள்ள இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் எஞ்சிய போட்டிகளுக்காக டெல்லி கெப்பிட்டல்ஸ் அணியின் தலைவராக ரிஷாப் பாண்ட் செயற்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரின் போது, டெல்லி கெப்பிட்டல்ஸ் அணியின் தலைவர் ஷ்ரேயாஸ் ஐயருக்கு உபாதை ஏற்பட்டது.

இந்த நிலையில், இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் எஞ்சிய போட்டிகளுக்காக டெல்லி கெப்பிட்டல்ஸ் அணியின் தலைவராக ரிஷாப் பாண்ட் தலைவராக செயற்படுவார் என தெரிவிக்கப்பட்டது.

எனினும், தற்போது ஷ்ரேயாஸ் ஐயர் உபாதையில் இருந்து மீண்ட நிலையில் எஞ்சிய போட்டிகளில் அவரும் விளையாடுவார் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும், குறித்த தொடருக்கு டெல்லி கெப்பிட்டல்ஸ் அணியின் தலைவராக ரிஷாப் பாண்ட் தான் செயற்படுவார் என அந்த அணி தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பராலிம்பிக் விழாவில் இலங்கைக்கு மற்றுமொரு பதக்கம்

இலங்கையின் சமித்த துலான், 2020 டோக்கியோ பராலிம்பிக் விழாவில் ஆடவருக்கான F64 ஈட்டி எறிதல் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.



2020 டோக்கியோ பராலிம்பிக் போட்டிகளில் F64 ஈட்டி எறிதலின் ஆடவருக்கான இறுதிப் போட்டியில் அவர் வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

இதனிடையே, இலங்கையின் தினேஷ் பிரியந்த ஹேரத், பராலிம்பிக் விளையாட்டு விழாவில் F46 ஈட்டி எறிதலின் ஆடவர் பிரிவில் புதிய உலக சாதனையை நிலைநாட்டி, முதல் தங்கப்பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

## ஓய்வை அறிவித்தார் டேல் ஸ்டெய்ன்



"And it's been a long December and there's reason to believe
Maybe this year will be better than the last
I can't remember all the times I tried to tell my myself
To hold on to these moments as they pass."

It's been 20 years of training, matches, travel, wins, losses, strapped feet, jet lag, joy, and brotherhood. There are too many memories to tell. Too many faces to thank.
So I left it to the experts to sum up, my favorite band, the Counting Crows.

Today I officially retire from the game I love the most.
Bitter sweet but grateful.

Thank you to everyone, from family to teammates, journalists to fans, it's been a incredible journey together.

தென் ஆபிரிக்க அணியின் வேகப் பந்துவீச்சாளர் டேல் ஸ்டெய்ன், அனைத்து வகையான சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும் இருந்து ஓய்வுபெறவுள்ளதாக அறிவித்துள்ளார்.

38 வயதான டேல் ஸ்டெய்ன், தனது 20 வருட கிரிக்கெட் பயணத்தில் பந்துவீச்சினால் அணிக்கு பல வெற்றிகளை பெற்றுக்கொடுத்துள்ளதுடன், ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்காக விளையாடி ஐபிஎல் போட்டிகளிலும் சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்தியுள்ளார்.

எனினும், உபாதை காரணமாக கடந்த சில வருடங்களாக போட்டிகளிலிருந்து விலகியிருந்த நிலையில், ட்விட்டரில் பதிவொன்றின் ஊடாக தனது ஓய்வை அறிவித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் 430 விக்கெட்டுகளையும், ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 196 விக்கெட்டுகளையும், இருபது20 போட்டிகளில் 263 விக்கெட்டுகளையும் டேல் ஸ்டெய்ன் கைப்பற்றியுள்ளார்.

## முதலாவது 20 க்கு 20 போட்டியில் பங்களாதேஷ் அணி வெற்றி

நியூஸிலாந்து அணிக்கு எதிரான முதலாவது 20 க்கு 20 கிரிக்கட் போட்டியில் பங்களாதேஷ் அணி 7 விக்கட்டுக்களால் வெற்றிபெற்றது.

டாக்காவில் இடம்பெற்ற இந்தப் போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, 16.5 ஓவர்களில் 60 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தது.

இதையடுத்து, 61 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலளித்தாடிய பங்களாதேஷ் அணி, 15 ஓவர்களில் 3 விக்கட்டுக்களை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்று வெற்றியடைந்தது.

இந்த வெற்றியின்மூலம், 5 போட்டிகள் கொண்ட 20 க்கு 20 தொடரில் 1 க்கு 0 என்ற அடிப்படையில் பங்களாதேஷ் அணி, முன்னிலை பெற்றுள்ளது.



# உலக பார்வை



## காஷ்மீரின் பிரிவினைவாத தலைவர் சயத் அலி கிலானி காலமானார்

காஷ்மீரின் பிரிவினைவாத தலைவர் சயத் அலி கிலானி (Syed Ali Geelani) தமது 92 ஆவது வயதில் காலமானார்.

நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்த அவர் ஸ்ரீநகரிலுள்ள தமது இல்லத்தில் உயிரிழந்தார்.


இந்திய ஆளுகைக்கெதிரான பிரசாரங்களை முன்னெடுத்த சிரேஷ்ட தலைவரான சயத் அலி கிலானி கடந்த 11 ஆண்டுகளின் பெரும்பகுதியில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

அவரது மறைவையடுத்து, காஷ்மீரின் பிரதான நகராகிய ஸ்ரீநகரில் கடுமையான பாதுகாப்பு நடைமுறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

கிலானியின் வீட்டிற்கு அருகாகவுள்ள வீதிகளில் முட்கம்பி தடைகளும் வீதித்தடைகளும் போடப்பட்டுள்ளன.

ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படக்கூடும் எனவும் இணைய சேவைகள் துண்டிக்கப்படக்கூடும் எனவும் உள்ளூர் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் ஆளுகைக்குட்பட்ட காஷ்மீரில் பதற்றம் நிலவிவரும் இந்த காலகட்டத்தில் இவ்வாறான கெடுபிடிகள் புதிதானவையல்லவென சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.



## நைஜீரியாவில் துப்பாக்கி முனையில் 70க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் கடத்தல்!

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் துப்பாக்கி முனையில் 70க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் கடத்தப்பட்டுள்ளனர்.

நாட்டின் வடமேற்கில் சாம்பாரா மாநிலத்தில் உள்ள அரச பாடசாலையிலிருந்து இந்த மாணவர்கள், அன்று (புதன்கிழமை) ஆயுத கும்பலால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து சாம்பாரா மாநில பொலிஸ் செய்தித் தொடர்பாளர் முகமது ஷேஹூ" கூறுகையில், 'மராதூன் பகுதியைச் சேர்ந்த கயா கிராமத்தில் அமைந்துள்ள மேல்நிலைப் பாடசாலை ஒன்றில் துப்பாக்கியுடன் நுழைந்த ஆயுத கும்பலால் அங்குள்ள 73 மாணவர்கள் கடத்தப்பட்டனர்.

மாணவர்களை விடுவிக்க பொலிஸ்துறை மீட்புக் குழுக்கள் இராணுவத்துடன் இணைந்து செயற்படுகின்றது' என கூறினார்.

உள்நாட்டில் 'கொள்ளைக்காரர்கள்' என்று அழைக்கப்படும் குற்றவாளிகளின் கும்பல்கள் பல ஆண்டுகளாக உள்ளூர் சமூகங்களிடையே அச்சத்தை பரப்பி வருகின்றன. ஆனால் பாதுகாப்புப் படைகள் சமீபத்தில் மோசமான வன்முறையைக் கட்டுப்படுத்த போராடி வருகின்றன.

டிசம்பர் மாதம் முதல் வடக்கு நைஜீரியாவில் உள்ள பாடசாலைகளில் இருந்து 1,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் கடத்தப்பட்டுள்ளனர்.

கடத்தல் கும்பல்களின் மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்து பெரும் பணத்தைக் கோருகின்றனர். அதை கொடுக்கும் பட்சத்தில் அவர்கள் விடுவிக்கப்படுகின்றனர்.

மேலும் பெரும்பாலான மாணவர்கள் இறுதியில் விடுவிக்கப்பட்டாலும், சிலர் சிறைபிடிக்கப்பட்டனர் அல்லது கொல்லப்பட்டனர்.



## COVID-19 தடுப்பூசி நன்கொடையை நிராகரித்தது வட கொரியா

நன்கொடையாக வழங்கப்பட்ட சுமார் 3 மில்லியன் COVID-19 தடுப்பூசிகளை வட கொரியா நிராகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

உலகில் நிலவிவரும் தடுப்பூசிக்கான தட்டுப்பாட்டை கருத்திற்கொண்டு, COVID-19 தொற்றினால் மோசமாக பாதிக்கப்பட்ட நாடொன்றுக்கு அவற்றை வழங்குமாறு வட கொரியா கோரிக்கை விடுத்துள்ளதாக ஐ.நா சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வறிய நாடுகளும் கொரோனா தடுப்பு மருந்துகளை பெற்றுக்கொள்வதை இலக்காகக் கொண்ட COVAX திட்டத்தின் கீழ், சீனாவில் தயாரிக்கப்பட்ட Sinovac தடுப்பூசிகள் வட கொரியாவிற்கு நன்கொடையளிக்கப்பட்டிருந்தன.

ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி வரை வட கொரியாவில் COVID நோயாளர்கள் எவரும் பதிவாகியிருக்கவில்லையென உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

சுகாதார பணியாளர்கள் உள்ளிட்ட 37,291 பேருக்கும் காய்ச்சல் போன்ற நோய்கள் காணப்பட்டவர்களுக்கும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில், கொரோனா தொற்று உறுதியாகவில்லையென உலக சுகாதார ஸ்தாபனம் அதன் வாராந்த அறிக்கையில் கூறியுள்ளது.

COVID-19 தொற்று ஆரம்பமாகியவுடனேயே, அதற்கெதிராக மிகவும் இறுக்கமான கட்டுப்பாடுகளை வட கொரியா அமுல்படுத்தியிருந்தது.

கடந்த ஆண்டு ஜனவரியில் நாட்டின் எல்லைகளை முதன்முதலாக மூடிய நாடுகளில் வட கொரியாவும் ஒன்றென்பது குறிப்பிடத்தக்கது.

பக்கவிளைவுகளை காரணங்காட்டி 2 மில்லியன் AstraZeneca தடுப்பூசிகளையும், ரஷ்யா பல்வேறு தடவைகள் வழங்க முன்வந்த Sputnik V தடுப்புமருந்தையும் வட கொரியா இதற்கு முன்னர் நிராகரித்திருந்தது.

COVID தடுப்புமருந்துகளின் செயற்றிறன் தொடர்பில் வட கொரியா சந்தேகங்களை வெளியிட்டு வருகின்றது.




## அயர்லாந்து சனத்தொகை 5 மில்லியனை கடந்தது

அயர்லாந்தின் சனத்தொகை 5 மில்லியனை கடந்துள்ளது. இந்த ஆண்டில் எடுக்கப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் 5.1 மில்லியனாக சனத்தொகை பதிவாகியுள்ளது.

1851 ஆம் ஆண்டிற்கு பின்னர் அந் நாட்டில் முதல்தடவையாக சனத்தொகை 5 மில்லியனை கடந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

12 மாதங்களில் 34,000 இனால் சனத்தொகை அதிகரித்துள்ளதுடன், இம்மாதம் ஏப்ரல் மாதம் வரையில் 65 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளின் எண்ணிக்கை 22,200 ஆல் அதிகரித்துள்ளது.

சனத்தொகை அதிகரிப்பிற்கு இடம்பெயர்வும் காரணம் என அயர்லாந்து அரசு தெரிவித்துள்ளது.



# காட்டின் தேவதைகள்– பட்டு ஷிஃபாகா (Silky Sifaka)

காட்டின் தேவதைகள் என்றழைக்கப்படும் இந்த பட்டு ஷி.ஃபாகாகள் வடகிழக்கு மடகாஸ்கரில் மட்டுமே வாழும் ஓரிட வாழ்விகள் ஆகும். 2625 அடி முதல் 6152 அடி வரை உள்ள மலைப்பகுதிகளில் இவற்றை காணலாம். இவற்றின் விலங்கியல் பெயர் பிரொபிதீகஸ் கேண்டிடஸ் (Propithecus candidus) கிட்டத்தட்ட நூறு வகையான தாவர வகைகளை இவை உணவாக உட்கொள்கின்றன. இலைகள், விதைகள், பழங்கள், பூக்கள் மற்றும் பட்டைகள் இவற்றின் உணவு பட்டியலில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவற்றைத் தவிர்த்து அவ்வப்போது மணலையும் உட்கொள்கின்றன.

பட்டு ஷி.ஃபாகாகள் உடல் முழுவதும் பளபளப்பான தூய வெண்மை நிற முடிகளையும், தலையில் மட்டும் வெள்ளியை உருக்கி விட்டது போல் இளம் சாம்பல் நிற முடிகளையும் கொண்டுள்ளன. காது மற்றும் முகத்தில் முடிகள் காணப்படுவதில்லை. வாலின் அடிப்புறம் காணப்படும் இளம் மஞ்சள் நிற முடிகள் இவற்றிற்கு மேலும் அழகூட்டுகின்றன. அளவில் பெரிய லீமெர் (Lemur) குரங்குகளான இவற்றின் நீளம் 3.1 முதல் 3.4 அடி எடை 5 முதல் 6.5 கிலோ. ஆண் பட்டு ஷி.ஃபாகா குரங்குகளின் நெஞ்சுப் பகுதியில் காணப்படும் பழுப்பு நிற அடையாளத்தை கொண்டு ஆண் பெண் குரங்குகளை எளிதாக கண்டறியலாம். ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்வதற்காக இவை சுரக்கும் நறுமண சுரப்பு நீரின் காரணமாக இப்பழுப்பு நிறம் உருவாகிறது. இணை சேரும் காலங்களில் பழுப்பு நிறம் மிகப் பெரிதாகவும், அடர்த்தியாகவும் காணப்படும்.

இரண்டு முதல் ஒன்பது பட்டு ஷி.ஃபாகாகள் இணைந்து ஒரு கூட்டமாக காணப்படுகின்றன. கூட்டத்தினை பெரும்பாலும் பெண் குரங்குகளே வழிநடத்துகின்றன. ஒரு கூட்டம் தம்முடைய வாழ்விட எல்லையாக கிட்டத்தட்ட 84 முதல் 116 ஏக்கரை வைத்துள்ளது. ஒவ்வொரு நாளும் கிட்டத்தட்ட 2300 அடிகள் உணவுக்காக இவை நடக்கின்றன. மற்ற லீமெர் குரங்குகளைப் போலவே இவைகளும் இரு கால்களால் சரிந்து வேகமாக நடக்கும் பழக்கத்தை உடையவை. பட்டு ஷி.ஃபாகாகளின் ஆயுட்காலம் பற்றி சரியான தரவுகள் நம்மிடம் இல்லை. ஆனால் மற்ற ஷி.ஃபாகா இன குரங்குகளின் ஆயுட் காலத்தை வைத்து இவை 23 முதல் 27 ஆண்டுகள் வரை உயிர் வாழும் என ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளனர். மடகாஸ்கரின் மழைக்காலமான நவம்பர் முதல் ஜனவரி வரை இவை இணை சேருகின்றன. ஆறு மாத கர்ப்ப காலத்திற்குப் பிறகு ஒரு குட்டியை ஈன்றெடுக்கின்றன. பிறந்த குட்டியை கூட்டத்திலுள்ள மற்ற பெண் குரங்குகளும் கவனிக்கும் வளர்ப்புத்தாய் முறையும் இவ்வினங்களில் காணப்படுகின்றது.

குரங்குகளில் 25 இனங்களை மிக அருகிய வகைகளாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அவற்றில் இந்த பட்டு ஷி.ஃபாகாவும் ஒன்று. வடகிழக்கு மடகாஸ்கரில் பயிரிடுவதற்காக பட்டு ஷி.ஃபாகாகள் வாழும் காடுகள் பெருமளவில் தீயிட்டு அழிக்கப்படுகின்றன. இதன் காரணமாகவும், வேட்டையாடுதலின் காரணமாகவும் இவ்வினம் இன்று அழிவின் எல்லையில் உள்ளது. 100 முதல் 1000 பட்டு ஷி.ஃபாகாகள் மட்டுமே உயிருடன் உள்ளதாக கணக்கெடுப்புகள் தெரிவிக்கின்றன. அவற்றிலும் வெறும் 250 மட்டுமே முதிர்ச்சியடைந்த பட்டு ஷி.ஃபாகாகள். அதனை தவிர்த்து எந்த விலங்கு காப்பகங்களிலும் இவை பாதுகாக்கப்படவில்லை. மடகாஸ்கரில் உள்ள மக்கள் இவற்றை சிம்போனா (Simpona) என்றழைக்கின்றனர். பட்டு ஷி.ஃபாகா என்னும் பெயருக்கும் பொருள் உள்ளது. இப்பெயரின் முதல் எழுத்தில் உள்ள பட்டு என்னும் வார்த்தை இவற்றின் அழகிய வெண்மை நிற முடிக்காகவும், ஷி.ஃபாகா என்னும் வார்த்தை இவை எழுப்பும் ஷீ- ஃபாக் (Shee- fak) எனும் எச்சரிக்கை குரலுக்காகவும் வழங்கப்பட்டுள்ளது.








இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 05.09.2021 அன்று வெளியிடப்பட்டது.